## அதிகாரம் 13

# இறுதி புத்திமதிகள்

பிரசங்கம், உபதேசம், நிருபம், ஆகிய அனைத்து அம்சங்களையும் ஒருங்கிணைத்த தனித்துவத்தைப் புதிய ஏற்பாட்டில் எபிரெயர் நிருபம் கொண்டிருக்கிறது. முதல் நூற்றாண்டு நிருபங்களுக்கான பண்புகளை முடிவுரையில் கொண்டுள்ளது என்றாலும், இது ஒரு சரியான முடிவாகும். இவ்வகை முடிவுரைக்கான பிரத்தியேகச் சொல்லாகிய "பேரரேஸன்" என்பது லத்தீன் சொல் *பெரரைஸ்யோ* (*peroratio*) என்பதிலிருந்து வந்தது.[1] ஒரு எழுத்தாளர் அல்லது பேச்சாளர் முடிவுரையின் வாயிலாக தன்னுடைய வாதங்களைச் சுருங்கக்கூறி அவருடைய உணர்ச்சிகளை எடுத்துரைக்கிறார். இந்த அதிகாரம் பிந்தைய எழுத்தாளர்களால் எழுதப்பட்டு இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை நம்புவதற்கு எந்த முகாந்தரமும் இல்லை.

பண்டைய உலகில், செய்திக்குக் கீழ்ப்படிய வாசகர்களுக்கு இந்த வகையான முடிவு வேண்டுகோளை விடுத்தார்கள். பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களையும், கடந்த கால மூப்பர்களையும், கிறிஸ்துவின் பாடுகளையும் ஆசிரியர் நினைவு படுத்தி இதை நிறைவேற்றினார் (வசனங்கள் 3, 7, 12). அவரது உத்தமம் தவறுதலாகக் கேள்விக்குட்படுத்தப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார் (வசனங்கள் 18, 19). "ஆசரிப்புக் கூடாரத்தில் பணியாற்றியவர்கள்" ஆனால் புதிய பரலோக ஐக்கியத்தில் பங்குபெற முடியாதவர்கள் போன்ற வெளி ஆபத்துகளைப் பற்றிச் சிறந்த முறையில் எழுதப்பட்ட முடிவுரை வாசகர்களை எச்சரித்தது (வசனம் 10). ஆசிரியரின் இறுதி அறிவுரைகள் நிருபத்தின் பிற பகுதியோடு முற்றிலும் இணக்கமானதாக இருக்கிறது. இந்தப் பிரசங்கத்தின் விவாதப் பகுதி நமக்குப் பின்னிருக்கிறது, ஆனால் குறிப்பிடத்தக்க காரியங்களைப் பற்றிய வாசகர்களின் நினைவுகளை இந்தக் குறிப்புகள் புதுப்பிக்கின்றன மற்றும் பிரதான குறிப்புகள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. ஒரு நல்ல முடிவு சுருக்கமாக இருக்க வேண்டும் என்று கிரேக்கப் பேச்சாளர்கள் உணர்ந்தார்கள், மேலும் மூன்று அல்லது நான்கு நிமிடங்களுக்குள் இந்தப் பிரசங்கத்தின் முடிவு இருப்பதினால் அந்த வார்த்தைக்கு உட்பட்டு காணப்படுகிறது.[2]

ஆசிரியரது உரையின் முடிவில், சபை மற்றும் தனிப்பட்ட பணிகளாகிய உபசரிப்பு, சிறைக்கைதிக்கான ஊழியம், உக்கிராணத்துவம், சேவை, சபை மூப்பர்களுக்குக் கீழ்ப்படிதல், ஜெபம் போன்ற பல்வேறு அம்சங்களையும் அவர் ஊக்கப்படுத்தினார்.

யூதர்களின் "பாளயத்துக்குப் புறம்பே போக" ஒரு இறுதி வேண்டுகோளை அவர் விடுத்து, இந்தப் "புத்திமதியான வார்த்தைகளைக்" கேட்போர் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படியும் வேண்டிக்கொண்டார் (13:13, 22). இந்த அதிகாரத்தைத் தவிர்த்து இன்றைய கிறிஸ்தவர்களுக்கு வேறு எதுவுமே பொருத்தமானதாக இருக்க முடியாது. தேவனுக்கான ஊழியம் கோருவது காணிக்கை மற்றும் மற்றவர்களுக்கு உதவுதல் என்று ஆசிரியர் வலியுறுத்தினார். இந்தச் சகோதரர்கள் ஏற்கனவே அத்தகைய அக்கறையை வெளிப்படுத்தியிருந்தனர் (6:10).

## சிநேகத்தை நினைவில் கொள்ளுங்கள் (13:1-6)

**13:1-3**

**1 சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது. 2 அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு. 3 கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்களும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து, தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.**

**வசனம் 1. சகோதர சிநேகம்** என்பது நன்கு அறியப்பட்ட வார்த்தையான φιλαδελφία (*பிலடெல்ஃபியா*, "சகோதர சிநேகம்") என்ற சொல்லில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது.[3] இது, பொதுவாகச் சகோதரர்களும் சகோதரிகளும் ஒருவருக்கொருவருக்கு இடையிலான இயல்பான சிநேகமாகும். இத்தகைய சிநேகத்தின் தேவை பவுலினாலும் (ரோமர் 12:10; 1 தெச. 4:9), பேதுருவினாலும் (1 பேதுரு 2:17; 2 பேதுரு 1:5-8) வலியுறுத்தப்பட்டது.

அவர்கள் மீதான தம்முடைய சிநேகத்தின் எடுத்துக்காட்டு மூலமாக இயேசு தமது ஜனங்களை உண்மையான சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் ஆக்கினார். இது அவர்கள் மத்தியில் சிநேகம் வளர உதவியது (யோவான் 13:34, 35). "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; *நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல* நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன், நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று *எல்லாரும்* அறிந்துகொள்வார்கள்" என்று அவர் கூறினார் (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). இந்த எபிரெயர்கள் இப்பொழுது கிறிஸ்துவிற்குள் சகோதரர்களாகச் சகோதர சிநேகம் கொண்டிருந்தார்கள், ஆனால் அது தொடர்ச்சியாக நிலைத்திருக்க அவர்கள் பணியாற்ற வேண்டியிருந்தது.

எருசலேமில் உள்ள பல்வேறு பிரிவினர்களுக்கிடையே வீண் சண்டைகள் அதிகரித்துக் கொண்டிருந்தது என்றாலும் யூதர்களாக, சில குடும்ப உணர்வுகளை அவர்கள் கொண்டிருந்தனர். இந்த ஒற்றுமையின்மை கி.பி. 70-ல் பயங்கரமான விளைவுகளுக்கு வழிவகுத்தது. எருசலேமில் யூதர்களுக்கிடையில் இருந்த மிகக் கடுமையான பிரிவினை, அவர்கள் ரோம படையிடம் சரணடைய மறுத்ததற்கான உண்மையான காரணமாக இருந்தது. சகோதர சிநேகத்தின் குறைபாடு யூத கிறிஸ்தவர்களுக்கிடையிலும் வளர்ந்து வந்திருக்கலாம்.

இந்தப் பரிசுத்தவான்கள் பிதாவுடன் இருக்கும் ஒருவரைப் போல இருந்ததினிமித்தம், அவர்களைச் “சகோதரர்கள்” என்று சொல்ல இயேசு வெட்கப்படவில்லை (எபி. 2:11). உறுப்பினர்கள் அனைவராலும் நேசிக்கப்பட்ட ஒரு சிறப்பான சகோதரத்துவத்தின் ஸ்தாபகர் இயேசு கிறிஸ்து ஆவார் (1 பேதுரு 2:17). இது சகோதரத்துவத்தின் புரிந்து கொள்ளுதலை உள்ளடக்கியுள்ளது. இது உறுதி செய்யப்பட்ட பின்பு, இதில் அங்கம் வகிப்பவர்களைச் சிநேகிக்க ஊக்கம் தளராமல் நாம் முயற்சி செய்ய வேண்டும். இயேசுவின் சீஷர்களின் விசுவாசமுள்ள குழுவில் ஒருவராக இருப்பதற்கு, ஒருவர் தேவாலயம், புனித நகரம், அதன் சமயம் ஆகியவற்றை விட்டு விட விருப்பம் உடையவராக இருப்பதன் மூலம் இந்தக் கிறிஸ்தவர்களிடையே சகோதரத்துவம் உறுதிப்படுத்தப்படுகிறது.

மனமாற்றமடைந்த ஆசாரியர்கள் எபிரெயர் நிருபத்தின் பிரதானப் பெறுநர்களாக இருந்தால், பிரமாணத்தின் ஆசிரியர்களாக அவர்களின் நிலைப்பாடு, தங்கள் சகோதரர்களை விடச் சற்று உயர்ந்தவர்களாகத் தங்களை உணர வைத்திருக்க வேண்டும்; அவர்கள் உண்மையான சகோதர சிநேகத்தைப் பெற்றிருக்க வேண்டுமானால், அந்த மனநிலை மேற்கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய புத்திரர்களாக இயேசு ஏற்றுக் கொண்ட அத்தகையவர்களை - விசுவாசம் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற யாவரையும் நாம் நிச்சயமாகச் சிநேகிப்போம் (கலா. 3:26, 27).

விசுவாசத்தில் பலவீனமானவர்களிடத்தில் விசேஷித்த கவனம் செலுத்தி, நம்முடைய அனைத்து சகோதர சகோதரிகளையும் அதிகமாகச் சிநேகிக்க அதிக வாஞ்சையுடையவர்களாக நாம் இருக்க வேண்டும். பிரிவினைகளை ஏற்படுத்தும் ஒருவரைச் சிநேகிப்பது கடினமானது; ஆனால் அவரது பிரிவினையைக் கடிந்து கொண்டு, மேலும் அன்பான ஐக்கியத்திற்கு அவரை அழைக்கும் சிநேகம் அவரிடமும் காட்டப்பட வேண்டும் (1 தெச. 5:14, 15; காண்க 2 தெச. 3:6). ஒருவருக்கொருவர் ஜீவனைக் கொடுக்கும் அளவுக்குச் சகோதர சிநேகம் வலிமையானதாக இருக்க வேண்டும் (1 யோவான் 3:16, 17). சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும்

எத்தனை இன்பமுமானது (சங். 133:1)! நம்முடைய ஐக்கியத்தில் பலவீனமுள்ளவர்களுக்கு உதவி செய்யும் வாஞ்சையுள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும் (ரோமர் 15:1, 2; கலா. 6:10).

சகோதர சிநேகம் மறைந்து போவதற்கான தீவிரமான ஆபத்து இருந்திருக்க வேண்டும், அல்லது இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்க மாட்டாது. எருசலேமில் கி.பி. 70ல் முற்றுகையின் போது பல்வேறு பிரிவினர்களுக்கு மத்தியில் பிரிவினைகளினாலும் கலகங்களினாலும் சக யூதர்களுக்கு இடையேயான சிநேகம் ஏறத்தாழ அழிந்து போயிருந்திருக்க வேண்டும்.

யூதேய கிறிஸ்தவர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பிரிவினருக்கு இந்தக் கடிதம் வாசிக்கப்பட்டிருந்தால், அவர்கள் பிரிக்கப்பட போகும் அந்த நாள் வந்துகொண்டிருந்தது. அவர்கள் ஓடிப்போக வேண்டும் என்று இயேசு கூறியபோது, சிலர் அதை விசுவாசித்ததினால் உடனடி ஆபத்து எதுவும் இல்லை என்று அவர்கள் உணர்ந்து, தங்கள் வீடுகளிலிருந்து தப்பி ஓட தயாராக இருந்திருப்பார்கள் (மத். 24:15-22; மாற்கு 13:14-20; லூக். 21:20-24). அது நிச்சயமாக ஐக்கியத்திற்கான ஒரு சோதனையாக மாறி சகோதர சிநேகத்தைத் தடுத்திருக்கலாம்.

**வசனம் 2. அந்நியரை உபசரித்தல்** என்பது, சகோதர அன்பின் ஒரு நடைமுறை செயல் விளக்கமாகும். மத்திய கிழக்கில், "உபசரித்தல்" என்பது நட்பின் ஒரு குறிப்பிடத்தக்க அடையாளமாக இருந்தது. இந்தச் செயல்பாடு உபத்திரவ காலங்களில் தீவிரமாகத் தேவைப்பட்டது, ஆனால் ஒருவரது வீட்டை மற்றவர்களுக்குத் திறக்க வேண்டிய கடமை சிலருக்கு சில நேரங்களில் அவமதிப்பானதாக இருந்திருக்கலாம். பேதுரு அந்தப் போக்குக்கு எதிராக எச்சரித்து "முறுமுறுப்பில்லாமல்" உபசரிக்க வேண்டும் என்று சகோதரர்களை வலியுறுத்தினார் (1 பேதுரு 4:9). "கிறிஸ்தவரல்லாத பார்வையாளர்களின் வெறுப்புக்கு ஆளாகவில்லை என்றால், ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் இதைச் செய்யத் தயாராக இருந்தது வியப்புக்குக் காரணமாகியது."[4] ஒரு பெண் "விதவைகள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட" "உபசரித்தல்" ஒரு தகுதியாக இருந்தது (1 தீமோ. 5:9, 10). இந்தப் பெண்கள் தங்களைத் தகுதியுள்ளவர்களாகக் காட்டியுள்ள தங்களுக்குப் பிரியமான வேலைகளைச் செய்வதற்கு ஆதரவு வழங்கப்பட்டது. ரோமர் 12:13-ல் உபசரிக்கும் பண்புடன் இருக்க வேண்டும் என அனைவரையும் பவுல் கட்டளையிட்டார்.

அதினாலே **சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு** என்று ஆசிரியர் குறிப்பிட்டார். ஆதியாகமம் 18 மற்றும் 19-ல் இடம் பெற்றிருக்கிற ஆபிரகாமும் லோத்துவும் அவர் மனதில் இருந்தார்களா? கர்த்தரையும் தேவதூதர்களையும் உபசரித்துக் கொண்டிருப்பதாக ஆபிரகாம் எப்போது உணர்ந்தார் என்பது நிச்சயமற்றது என்றாலும் இந்த அசாதாரணமான விருந்தினர்களை உபசரித்த அந்த நிகழ்வை,

அவரது வாழ்க்கையில் மிகவும் அற்புதமான நாட்களின் மத்தியில் அவர் நிச்சயமாகத் திரும்பிப் பார்க்க முடியும் (மேலும் பார்க்க நியா. 6:11-24; 13:2-21). "அவருடைய விசுவாசத்திற்காகவும் உபசாரத்திற்காகவும் ஒரு குமாரன் [ஆபிரகாமுக்கு] அவரது முதிர் வயதில் கொடுக்கப்பட்டான் ... உபசாரத்திற்காகவும் தேவபக்திக்காகவும் லோத்து சோதோமில் இருந்து காப்பாற்றப்பட்டான் ..." என்று கி.பி. 95-ல், ரோமின் கிளெமென்ட் எழுதினார்.[5] அன்புடனும் தயவுடனும் "அந்நியர்களை" நடத்துவதற்கான இந்த நியமம் பிரமாணத்தினால் வலியுறுத்தப்பட்டது (லேவி. 19:34). இது "அந்நியனின்-அன்பு" (φιλοξενία, *பிலாக்ஸநியா*) என்பதாக இருந்தது.

முதல் நூற்றாண்டில் உபசரிப்பு மிகவும் அவசியமாக இருந்ததற்கு மற்றொரு காரணம், அக்காலத்திய சத்திரங்களில் தங்குவதற்கான செலவு அதிகமாக இருந்தது; மேலும் அவைகள் ஒழுக்கக்கேட்டின் மையங்களாக இருந்தன. உபத்திரவப்படுத்தப்பட்டுத் தங்கள் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்கள் கிறிஸ்தவ உபசரிப்பின் தேவையை உடையவர்களாக இருந்தனர். அது முக்கியமானது, எனவே, சபையின் சக உறுப்பினர்களிடையே இந்த நடைமுறையைக் கையாள வேண்டியதாய் இருந்தது. விடுதிகள் மற்றும் உணவகங்கள் இருந்தபோதிலும், இன்றும் இந்த பொறுப்பு நம்மிடமிருந்து அகன்று போகவில்லை. உபசரித்தல் என்பது, ஒருவர் மூப்பருக்கான தகுதியைப் பெற உதவுகிற ஒரு கிறிஸ்தவக் கடமையாகும் (1 தீமோ. 3:2). மூப்பர் இந்தத் தகுதியைப் பெறுவதில் அவரது மனைவி மிகவும் உதவியாக இருக்க முடியும்.

**வசனம் 3.** விசுவாசத்தின் காரணமாக காவலில் வைக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கான அக்கறையை எபிரெயர்கள் ஏற்கனவே வெளிப்படுத்தி இருந்தார்கள் (10:32-34). அவர்கள் [இந்த] **காவலில் வைக்கப்பட்டவர்களை நினைவில்** மட்டும் வைத்துக்கொள்ளவில்லை, ஆனால் அவர்களுடன் **சிறையில் இருப்பது போன்று** [அவர்கள்] **நடக்க வேண்டியிருந்தது** (காண்க ரோமர் 16:7).[6]

**நாம்** [அனைவரும்] சபையாகிய **சரீரத்தோடும்** ஐக்கியத்தோடும் இருக்கிறோம் (1 கொரி. 12:25; எபே. 1:22, 23). இந்த வாசகர்களைக் காவலில் இருந்த சகாக்களாக எண்ணிப் பார்ப்பது, உதவியை வழங்குவதற்கான ஒரு கட்டளை மட்டுமல்லாமல், பயனுள்ள அறிவுரையாகவும் இருந்தது. உபத்திரவத்தினால் பாதிக்கப்பட்டவர்களுடன் பிணைக்கப்படுவது எவ்வளவு கடினமாக இருந்திருக்க வேண்டும்! நம்மில் பெரும்பாலானவர்கள் சிறை வாசத்தைக் கற்பனை செய்ய முடியாததாக இருக்கிறது. ஆகையால், ஒருவர் தனது சுதந்திரத்தை இழப்பதென்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ள, சிறைக்கு சிறை ஊழியத்தின் ஒரு பகுதியாக எப்போதாவது செல்வது நமக்கு உதவும். காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களை

"நினைத்துக்கொள்ளுங்கள்" என்பது "அவர்களைப் பற்றிச் சிந்தித்துக்கொள்ளுங்கள்" என்பதை விட அதிகப் பொருள் கொண்டதாகும். அவர்களுக்கு உதவி செய்வதைத் தொடர வேண்டும் என்பது இதன் பொருள்.

அக்கறையும் பகிர்விற்கான ஒரு வாஞ்சையும் சபையின் முந்தைய வரலாற்றில் தெளிவாக இருந்தது (அப். 2:44-47). புதிய ஏற்பாட்டுக் காலம் முழுவதும் அந்த இயற்கைப் பண்பு பேணப்பட்டது (அப். 12:5, 12; 15:22, 25). 1 கொரிந்தியர் 12:26-ஐ எழுதியபோது சிறையில் இருந்தவர்களைப் பற்றிப் பவுல் கருத்தில் கொண்டிருக்கலாம். அப்போஸ்தலன் ஒரு ரோம சிறையில் இருந்தபோது, "லூக்கா மட்டுமே என்னுடன் இருக்கிறான்" என்று அவர் எழுதினார் (2 தீமோ. 4:11). "அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவுமில்லை" (2 தீமோ. 1:16) என்ற ஒரு உயர் பாராட்டு ஒநேசிப்போருக்கு வழங்கப்பட்டது. மத்தேயு 7:12 இன் "பொன்னான விதியை" நாம் செயல் படுத்தினால், காவலில் வைக்கப்பட்டவர்கள் மீது அக்கறை செலுத்துவதற்கான அறிவுரைக்கு நாம் கீழ்ப்படிவோம்.

**13:4-6**

**[4]விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். [5]நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. [6]அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே.**

**வசனம் 4.** குடும்பத்தின் எந்த ஒரு சீர்குலைவும், அனைத்து சமுதாயத்தையும் பாதிக்கும் என்பதை எழுத்தாளர் தெளிவாக அறிந்திருந்தார். விவாகம் என்பது ஒரு சாதாரணக் "காகிதத் துண்டு" அல்ல. தேவன்தாமே அதைக் கட்டளையிட்டார். அவர் தள்ளிவிடுதலை வெறுக்கிறார் (மல். 2:15, 16). பக்தியுள்ள குடும்பங்கள் நீதியின் சந்ததியை உருவாக்குகிறார்கள் என்பதால், தேவன் அவர்களை விரும்புகிறார்.

நம்மைப் பொறுத்தவரை உலகம் நம்மைவிட வித்தியாசமான தரங்களைக் கொண்டுள்ளது. நமது இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு உலகில், திருமணத்தையும் குடும்பத்தையும் அழிப்பதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட ஒரு முயற்சியை நாம் காண்கிறோம். கிறிஸ்தவர்கள், இந்த வசனப் பகுதிக்கு இசைவாக, வேதாகமக் குடும்ப

அமைப்பிற்குக் குறிப்பிட்ட மரியாதை உடையவர்களாக இருக்க வேண்டும்.

சகோதரத்துவ நேசத்தையும் சமூகத்தில் நல்ல ஒரு வலுவான செல்வாக்கையும் பராமரிக்க ஒருவரது திருமண உறுதிமொழிக்கான தூய்மையும் நம்பகத்தன்மையும், முக்கியமானது. இந்த உறுதிமொழிக்கான உண்மைத்தன்மை ஒரு நாகரிகத்தின் வெற்றிக்குத் தேவையானது. திருமணப் பந்தத்தில் ஒரு புனிதத்தன்மை இணைக்கப்படுகிறது. **விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாய் இருக்க வேண்டும்** என்ற கட்டளை அடிக்கடி அவமதிக்கப்படுகிற ஒன்றாக இருக்கிறது, "தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்று இயேசு அதை வலியுறுத்திக் கூறினார் (மத். 19:6). இதற்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்போது மோசமான விளைவுகளை அது ஏற்படுத்துவதாக இருக்கிறது.

விவாக உறுதிமொழியை மீறுதல் தேவன் கண்டிக்கிற ஒரு பாவமாகும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. குற்றவாளிகள் அனைவரையும் அவர் தண்டிப்பார். (காண்க நீதி. 7:6-27.) தேவனை மறுதலித்து வேதாகமத்தைக் காலாவதியான புத்தகமாகக் கருதுகிறவர்களுக்கு இது ஒரு பொருட்டல்ல. தேவனுடைய வார்த்தையையும் அவருடைய பிரமாணங்களின் முக்கியத்துவத்தையும் பற்றி மக்களை நம்பச் செய்வதற்கு முன்பு நாம் கிறிஸ்தவத்திற்கும் அது குறித்த அனைத்து ஆதாரங்களை வழங்க வேண்டும்.

பாலியல் உறவு திருமணத்திற்கு புறம்பாக இருக்கும் என்றால் இந்த திருமண பந்தம் அசுத்தமாக்கப்படுகிறது என்பதை **விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக** என்பது அறிவுறுத்துகிறது. நிருபத்தின் ஆசிரியர் இந்த விதியை மீறுகிற பாவிகளை இரண்டு பிரிவுகளாகப் பெயரிட்டார். முதலாவது **வேசிமார்க்கத்தார்** ("வேசிக்கள்ளர்"; KJV). இந்த வார்த்தை πορνεία (*பர்நாயா*), என்பதிலிருந்து வந்தது, இதன் ஒருமை பெயர்ச்சொல் πόρνος (*பர்நாஸ்*) என்ற வார்த்தையாகும். இது தள்ளிவிடுதலை நியாயப்படுத்தும் செயலாகும் (மத். 5:32; 19:9).

*பெர்நாயா* என்னும் சொல் ஒரு விபச்சாரி அல்லது ஓரினச்சேர்க்கை பழக்கம் போன்றவற்றைக் கொண்ட எந்த ஒரு ஒழுக்கமற்ற நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது. இது "சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட எல்லைகளுக்குட்பட்ட உறவுகள் உட்பட, பலவித பாலியல் முறைகேடுகளை உள்ளடக்கியது."[7] "ஓரினச்சேர்க்கை பழக்கத்தை ஏற்றுக்கொள்வதை இயேசு ஒருபோதும் கண்டிக்கவில்லை" என்று ஒருவர் துல்லியமாகக் கூற முடியாது. *பெர்நாயா* என்பது பாலியல் வக்கிரங்கள், திருமணமாகாதவர்களுக்கு இடையேயான அல்லது திருமணமான ஒருவர் தனது சொந்த மனைவி அல்லது கணவன் அல்லாத வேறு ஒருவருடன் உடலுறவு கொள்ளுதல் போன்ற பலவிதமான ஒழுக்கக் கேடுகளுக்குப் பொருந்துகிறது.

ஓரினச் சேர்க்கை நடவடிக்கைகள் இந்தச் சொல்லினால் கண்டிக்கப்படுகின்றன.[8]

தங்களது விவாக வாக்குறுதியை மீறுபவர்கள் **விபசாரக்காரர்கள்** (μοιχός, *மாய்காஸ்* என்பதிலிருந்து வந்த). திருமணப் பந்தத்தில் உள்ள ஒரு வாழ்க்கைத்துணை மற்றவரிடம் உண்மையற்று இருக்கும் தன்மையை விபச்சாரம் குறிக்கிறது. "பொதுவாக, எல்லா விபச்சாரமும் வேசித்தனமாகும் ஆனால் எல்லா வேசித்தனமும் விபசாரம் அல்ல என்கிற ஒரு பயனுள்ள விளக்கம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது."[9]

வசனம் 4 "விவாகப் பந்தத்தின் எந்தவொரு மீறுதலுக்கும் எதிரான ஒரு தெளிவான எச்சரிக்கையாகும். இந்தப் பந்தத்தை அலட்சியமாகக் கருதுகிறவர்கள் மனிதர்களின் தீர்ப்பில் இருந்து தப்பிக்கலாமென்றாலும், அவர்கள் மனந்திருந்தாவிட்டால், தேவனுடைய தீர்ப்பிலிருந்து ஒருபோதும் தப்ப முடியாது."[10] இந்த மீறுதலினால் குற்றவாளியான ஒருவன் "மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்" என்று 1 தெசலோனிக்கேயர் 4:1-8 இல் பவுல் கூறுகிறார். நமக்குள் பரிசுத்த ஆவியானவர் இருந்தால், எந்தவொரு பாலியல் ஒழுக்கக் கேட்டிலிருந்தும் விலகி வாழ்கிற "பரிசுத்தமான" வாழ்க்கை நமக்கு அவசியமாகிறது. கிறிஸ்துவால் சரீரத்திலும் ஆவியிலும் பரிசுத்தமாக்கப்பட்ட ஒருவன் வேசித்தனம் செய்தால், அவன் தன்னுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் கிரியைகளை எதிர்க்கிறான் (1 கொரி. 6:15-20).

இந்தப் பரிசுத்த வழிமுறையைப் பின்பற்றுவதற்கான பெரும் தூண்டுதல் **தேவன் நியாயந்தீர்ப்பார்** என்பதை நினைவில் வைத்துக் கொள்வதாகும். குற்றத்தை உணர்ந்து வருந்தாத வேசி மார்க்கத்தார் அல்லது விபசாரக்காரர் ஒவ்வொருவரும் தேவனுடைய கரத்தினால் பாடு அனுபவிப்பார்கள்! நியாயந்தீர்ப்பதற்கு ஒரு நாள் குறிக்கப்பட்டிருக்கிறது, ஆகவே குற்றத்தை உணர்ந்து வருந்த தவறுவதைத் தேவன் ஒருபோதும் மறப்பதில்லை என்பதை நினைவில் கொள்ள நாம் எல்லாரும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (அப். 17:30, 31). பாவம் செய்த ஒருவன் இந்த வாழ்க்கையில் கடுமையான விளைவுகளிலிருந்து தப்பிக்கலாம், ஆனால் மரணம் வருவதற்கு முன்பு தேவன் எல்லாவற்றையும் முடிவு செய்துவிட மாட்டார்.

அந்தக் காலத்தில் சத்திரங்களுடன் ஒழுக்கக்கேடு தொடர்புடையதாக இருந்த காரணத்தினால், உபசரித்தல் பற்றிய விவாதத்தோடு இந்த எச்சரிக்கையும் வருவது பொருத்தமானதாக இருக்கிறது. "அசுசிப்படாத விவாகமஞ்சம்" என்பது விவாகம் இருக்க வேண்டிய விதத்தில் தூய்மையானதாகவும் பரிசுத்தமானதாகவும் இருப்பதைக் குறிக்கிறது. ஒருவர் அவிசுவாசியான ஒருவரை விவாகம் செய்திருந்தாலும் கூட விவாகமானது தேவனால் பரிசுத்தமானதாக

எண்ணப்படுகிறது (1 கொரி. 7:13, 14).

**வசனம் 5.** இதுவரை, உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையின் நான்கு அறிகுறிகளை நாம் பார்த்திருக்கிறோம். ஐந்தாவது அறிகுறியானது வசனங்கள் 5 மற்றும் 6-ல் கொடுக்கப்பட்டிருக்கும் பண்பாகிய, பேராசைக்குப் பதிலான மனநிறைவு. எல்லாக் காலங்களிலும் இடங்களிலும் மக்கள் செய்கிற இரண்டு பாவங்கள், தவறான பாலியல் இச்சைகளும் (வசனம் 4) பண ஆசையுமாகும் (வசனம் 5).

பல உலகப்பிரகாரமான மக்களது செயல்களின் பட்டியலில் தலைசிறந்த இடத்தை வகிப்பது பொருட் செல்வமும் பாலியல் இன்பமுமாகும். காணப்படும் பொருட்களினால் வரும் பாவங்களும் ஒழுக்கக்கேடான பாவங்களும் அதிருப்திக்குரிய பாவங்கள் என்பதால் இரண்டும் சரியான முறையில் இங்கே இணைக்கப்பட்டிருக்கிறது.

**பண ஆசையில்லாதவர்களாய் இருக்க வேண்டும்** என்ற அறிவுரையுடன் இந்த வசனம் தொடங்குகிறது. “பண ஆசை” ἀφιλάργυρος (*அபிலார்குராஸ்*) என்ற வார்த்தை, இந்த இடத்தைத் தவிர்த்து புதிய ஏற்பாட்டில் 1 தீமோத்தேயு 3:3 ல் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. பவுல் “பேராசைகள்” பற்றிப் பேசியபோது, சட்டவிரோத பாலியல் ஆசை அல்லது பண ஆசையை குறிப்பிடுகிறார்.[11] ஆசிரியர் இங்கே செய்தது போலவே எபேசியர் 5:3 இல் பவுல் பாலியல் பாவங்களை எச்சரிப்பதிலிருந்து “பண ஆசை” குறித்த எச்சரிப்புக்கு மாறுகிறார். செல்வம் மற்றும் மனநிறைவு பற்றிய போதனை, 1 தீமோத்தேயு 6:6-10 உடன் முழுமையாக ஒத்துப் போகிறது.

கடனும் சூதாட்டமும் ஒருவருடைய வாழ்க்கைச் சூழ்நிலையின் அதிருப்திக்கு வழிவகுக்கிறது. இவை இரண்டும் கொடிய வறுமைக்கு மட்டுமே வழிவகுக்கிறது. ஒருவருடைய வாழ்க்கையின் முக்கியக் குறிக்கோள் பணத்தை ஈட்டுதல் என்று இருக்கும்போது “பண ஆசை” தெளிவாகக் காணப்படுகிறது.

“பண ஆசையில்லாதவர்களாய்” இருப்பது மட்டுமே மனநிறைவோடு இருப்பதற்கான ஒரே வழியாகும். பண ஆசை, அல்லது பேராசை அடிக்கடி கண்டிக்கப்படுகிறது.[12] தேவனுக்கும் செல்வத்திற்கும் ஒருவன் ஊழியம் செய்ய முடியாது என்று இயேசு எச்சரித்தார் (மத். 6:24). அவர் பயன்படுத்திய μαμωνᾶς (*மமோநாஸ்*) என்ற வார்த்தை, நிச்சயமற்ற தோற்ற இடத்தைக் கொண்டதாகும். இந்த வார்த்தையின் அராமிய வார்த்தை “பணம்,” “செல்வம்,” “சொத்து,” “உலகப் பொருட்கள்” அல்லது “லாபம்” ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில், செல்வத்தில் அன்பு வைப்பது பாவங்களின் முழுப் பட்டியலுக்கும் காரணமாகிறது (1 தீமோ. 6:10). காணப்படுகிற பொருள்களின் மீதான ஆசை, கவலையை

உருவாக்குகிறது (காண்க மத். 6:26-33), மேலும் கவலை மனநிறைவுக்கு எதிரானது. கவலைக்கு எதிரான இயேசுவின் போதனைக்கு முன்னர் “உலகப்பொருளுக்கு” (KJV) ஊழியம் செய்யாமல் இருக்க வேண்டும் என்ற போதனை இருக்கக் காண்பது இயல்பானது.

“பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல” என்று இயேசுவும் எச்சரித்திருந்தார் (லூக். 12:15). ஒருவரை எவ்வளவு மதிப்புள்ளவர் என நாம் வினவும்போது “அவர் எவ்வளவு சொத்து வைத்திருக்கிறார்?” என்று நாம் கருதுகிறோம் என்பதை மறந்துவிடுகிறோம்.[13] பேராசை ஒருபோதும் ஒருவரைச் சந்தோஷமாக இருக்கச் செய்ய முடியாது; இது அதிருப்தியை உருவாக்குகிறது. உலகப்பொருளைத் தங்களது முக்கியமெனக் கருதுபவர்கள் “அழிவிலும் சேதத்திலும்” அமிழ்த்தப்படுவார்கள் என்று பவுல் கூறினார் (1 தீமோ. 6:9). ஒரு மனிதன் ஒரு சதுப்புநிலத்தில் சிக்கிக் கொண்டு, சேற்றின் கீழ் மூழ்கிக்கொண்டிருப்பதாக இது காட்டுகிறது.

[நமக்கு] **இருக்கிறவைகள் போதுமென்று** எண்ணி கர்த்தர் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார் என்பதை உணர்வதன் மூலம் பணத்தின் மீதான அன்பு முறியடிக்கப்படுகிறது. கர்த்தர் நம்மீது அக்கறையுள்ளவராக இருக்கிறார் என்று நாம் நம்பும்போது, நமது பண தேவைகளைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

“மன நிறைவுடன்” (ἀρκέω, *ஆர்கேயோ*) இருப்பது என்பது “தவறாத வலிமையை” அல்லது “திருப்தி” அடைய போதுமான வாழ்வாதாரத்தைக் கொண்டிருப்பது என்று பொருள்.[14] இந்தப் பெயர்ச்சொல்லின் ஒத்த வினைச்சொல் பிலிப்பியர் 4:11-ல் பவுலால் பயன்படுத்தப்பட்டது. இங்கு “சுயம்” என்பதன் முற்சேர்க்கை “தன்னிறைவு” என்று பொருள் கொள்வதற்குக் காரணமாகிறது. மனிதன் தனக்குத்தானே நிறைவுள்ளவனாக இருக்க வேண்டும் என்பது ஸ்டோயிக்குகளின் சிந்தை, ஆனால் அந்த மனநிறைவு கிறிஸ்துவில் மட்டுமே காண முடியும் என்பது பவுலின் கருத்தாக இருந்தது. வெறுமனே அவரது சுய வல்லமை மூலம் அல்லாமல் கிறிஸ்துவை அவர் சார்ந்திருந்ததினால் இந்தப் பண்பைப் பெற்றிருந்தார். “நிறைவுடன்” இருப்பது என்பது நமக்குத் தேவையான அனைத்தையும் வழங்குகிற தேவனைச் சார்ந்திருப்பதை உள்ளடக்கி இருப்பதால் திருப்திகரமாக இருப்பதை விட வலிமையானது. “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் ...” என்று மத்தேயு 6:33 பேராசையையும் கவலையையும் தவிர்க்க வழி கூறுகிறது.

தெய்வீக மனநிறைவானது தேவனே சொன்னதின் மூலம் உண்டாக்கப்படுகிறது. அவர் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார்

என்று இரட்டை எதிர்மறை[15] வாக்கியத்தை அவர் அறிவித்தார்: **நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.**[16] “நான் ஒருபோதும், உன்னை விட்டு விலகவும் உன்னைக் கைவிடவும் இல்லை,” என்று இந்த அழகான கூற்று உண்மையில் மொழியாக்கம் செய்யப்படலாம்.[17] “என்னால் முடியாது, என்னால் முடியாது, உன்னைக் கைவிட என்னால் முடியாது, தடுமாற்றத்தில் கட்டுப்பாடற்ற நிலையில், ஆதரவற்ற நிலையில், இக்கட்டில் உதவியற்ற ஆதரவற்ற நிலையில், உன்னைக் கைவிடுவதில்லை.” என்ற இந்தப் பொழிப்புரையை கென்னத் வுயெஸ்ட் கொடுத்தார்.[18] இந்த வசனம் தேவனுடைய ஆற்றல்மிக்க அன்பின் பல உத்தரவாதங்களை அவருடைய பிள்ளைகளுக்கு அளிக்கிறது. சில சமயங்களில் நம்முடைய பரலோகத் தகப்பனை நாம் கைவிட்டாலும், அவர் நம்மைக் கைவிடுவதில்லை.[19]

**வசனம் 6.** அதினாலே நாம் தைரியங்கொண்டு: **கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான்? என்று நாம் உறுதியுடன் பேசலாம்.** யோசுவா 1:5, உபாகமம் 31:6, மெசியானிய சங்கீதமாகிய சங்கீதம் 118:6, என்பவற்றிலிருந்து இது எடுக்கப்பட்டுள்ளது (மேலும் பார்க்க 1 நாளாகமம் 28:20).[20] இது மத்தேயு 21:42-ல் கிறிஸ்துவாலும், அப்போஸ்தலர் 4:10, 11-ல் பேதுருவாலும் மேற்கோள் காட்டப்பட்டது. கிறிஸ்துவின் ஆவியானவர் தீர்க்கதரிசிகளில் வாசம் செய்கிறார் என்ற வார்த்தைகள் கிறிஸ்துவாலேயே கூறப்பட்டது என்பது இதன் பொருள் (1 பேதுரு 1:10, 11). கிறிஸ்தவப் பரிசுத்தத்தின் முக்கிய அம்சங்களையும் பரிசுத்த வாழ்க்கையையும் ஆதரிப்பதற்கு புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு வசனங்கள் மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இதை எபிரெயரில் மட்டுமல்லாமல், நிருபங்கள் முழுவதிலும் காணமுடியும். நாம் அதன் கொள்கைகளைக் குறைவாக மதிப்பிடுதல் கூடாது. நாம் தேவனை நம்பி அவரைச் சார்ந்திருந்தால் மட்டுமே, பணத்திற்கான ஆசையைக் கடந்து அதன் மூலம் மன நிறைவோடு இருக்க நாம் கற்றுக்கொள்ளலாம். பரிசுத்தவான்கள் வாழ்க்கையில் தங்கள் நிலைமையை மேம்படுத்த எந்த முயற்சியும் செய்வதும் அல்லது மற்றவர்களுக்கு அவர்களின் முன்னேற்றத்தை மேம்படுத்த உதவுவதும் கூடாது என்பது இதன் பொருள் அல்ல. எனினும், அதிகமான நன்மைகளைச் செய்ய இன்னும் அதிகமானதைப் பெற முயற்சிக்க வேண்டும் (எபே. 4:28), வெறுமனே அதைச் சேகரிப்பதற்கு அல்ல. ஒவ்வொருவரும் பணம் மற்றும் உடைமைகள் நோக்கிய அவரது மனப்பான்மையைத் தேவனுடைய தரத்தோடு ஒப்பிட்டுத் தங்களைத் தாங்களே நியாயந்தீர்க்க வேண்டும். பெரும்பாலும் காணப்படுகிற பொருட்களுக்கான ஏக்கம் வறுமை பற்றிய பயத்தின் விளைவாக தேவன் மீது நம்பிக்கை குறைவைக் குறிக்கிறது.[21]

வசனம் 6-ல் தேவன் நமது “சகாயர்” (βοηθός, *பொயேதோஸ்*) என்று அழைக்கப்படுகிறார்; ஆனால் 2:18-ல் இயேசுவும் நமது பிரதான ஆசாரியராக நமக்கு “உதவிசெய்கிறவர்” என்று நாம் காண்கிறோம். செப்துவஜிந்த்-ல் “கர்த்தர்” என்பது சங்கீதம் (118:6, 7)-ல் மேற்கோள் காட்டப்பட்டுள்ள பிதாவாகிய தேவனின் பெயர், ஆனால் எபிரெயரில் *kurios* (*குரியாஸ்*) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக, அந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவைக் குறிக்கிறது. யூதர்கள், எபிரெய பழைய ஏற்பாட்டை வாசிக்கிறபோது, יהוה (*யோவே*, “Yahweh”) என்ற வார்த்தைக்குப் பதிலாக אֲדֹנָי (*அடோனய்*, “Lord”) என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இருந்தார்கள். மசோரெட்டுகள் பின்னர் தேவனுடைய பெயரை வீணாக உச்சரிப்பதில்லை என்பதினால் வீணாக அதை உச்சரிப்பதைத் தவிர்க்க *அடோனய்* என்பதில் உயிர் எழுத்தை உட்புகுத்தி பெயரை “Yahweh,” யேகோவா என்று மாற்றினார்கள். தேவனுடைய அதேபெயரை பொது இடங்களில் பேசத் துணியாததால், அந்தப் பெயருக்குப் பதிலாக “கர்த்தர்” என்று பயன்படுத்தினர். இவ்வாறாகத் திவ்விய பெயரைப் பற்றிப் பயபக்தியுடன் அவர்கள் இருந்தார்கள்.

இத்தகைய சகாயர் நமக்கிருக்கும்போது, மனுஷன் நமக்கு என்னசெய்வான்? உண்மையில், மனிதன் நமக்கு அநேக விதமான காரியங்களைச் செய்யலாம். கிண்டல், அவதூறு, ஏளனம், கசப்பான வார்த்தைகள், அல்லது உடல் துஷ்பிரயோகம் ஆகியவற்றால் நாம் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம்; சிலருக்குக் கடந்த காலங்களில் நடந்தது போன்று நாம் இரத்தசாட்சி ஆக்கப்படலாம். எனினும், இந்த மீறல்கள் ஒன்றினாலும் தேவனுடைய இறுதியான நன்மையின் மீது அல்லது அவரது மக்களை மகிமைக்குக் கொண்டு வரும் அவரது வாக்குறுதியின் மீது உள்ள கிறிஸ்தவ விசுவாசத்தைத் தோற்கடிக்க முடியாது (2:10). “தேவன் தம் மக்களை மற்றவர்கள் கைகளின் உபத்திரவத்திற்கு விலக்கவில்லை என்றாலும், நித்திய ஜீவனுக்குத் துன்பத்தின் மூலம் அவர்களைக் கொண்டுவருகிறார் என்பது உட்குறிப்பாகும்” (2:10; 5:7-10).[22]

நாம் கைவிடப்பட்டவர்களாக உணர்ந்தாலும், அவர் நம்மை கைவிடுவதில்லை. நமது தேவன் சரீரப்பிரகாரமான தீங்கிலிருந்து நம்மைப் பாதுகாக்க உறுதியளிக்காவிட்டாலும்கூட, அவர் எப்போதும் நம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார். இயேசு சிலுவையில் மரிக்கப் போகும் காலம் வந்திருந்த நிலையில், அவர் அத்தகைய வாக்குறுதியைப் பெற்றார் (மத். 4:6; பார்க்க சங். 91:11, 12). ஆவிக்குரிய தீங்கிலிருந்து நம்மைப் பாதுகாப்பதாகக் கர்த்தர் உறுதி அளித்திருக்கிறார். கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தை நாம் காத்துக்கொண்டிருக்கும் வரை, தேவனுடைய அன்பிலிருந்து எதுவும் நம்மைப் பிரிக்க முடியாது (ரோமர் 8:35-39).

கிறிஸ்துவிடம் மனமாறிய சில யூதர்கள் விசுவாசத்தில் பலவீனர்களாக இருந்து கர்த்தரை விட்டு விலகும்படியான அழுத்தத்தை உணர்ந்தனர். சோதனைக்கும் தேவையான உத்தரவாதத்திற்குமான பலியின் விளிம்பில் அவர்கள் இருந்தார்கள் என்றால், நாமும் அவ்வாறு இருக்கிறோம். அவர்களைப் போலவே, சங்கீதக்காரன் காட்டிய அவ்வகை விசுவாசத்தைக் காண்பிக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

## முன்பு உங்களை நடத்தினவர்களையும் நமது பிரதான ஆசாரியரையும் நினைத்துக் கொள்ளுங்கள் (13:7-16)

**13:7**

**[7]தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.**

**வசனம் 7.** கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய ஆறாவதும், இறுதியானதுமான பண்புக்கூறுகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. தங்களை நடத்தினவர்களுக்கு முன் மூன்று வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் சபையில் அவர்களைக் கனப்படுத்தவும், பின்பற்றவும் வேண்டும் என்று இதன் ஆசிரியர் அவரது வாசகர்களை வலியுறுத்தினார்.

இங்கே குறிப்பிடப்பட்ட நடத்துகிறவர்கள் பேராசை கொண்ட மோசமானவர்கள் அல்ல. எபிரெயர்களுக்கு விசுவாசம் அளிப்பதற்கான நல்ல முன்மாதிரிகளாக அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். **நடக்கையின் முடிவை** என்று எழுதியதைக் கருத்தில் கொள்ளும்போது, இதை எழுதிய காலத்தில் அவர்கள் மரித்து விட்டார்கள். அவர்கள் பரலோகத்திலிருந்தார்கள் அல்லது அவர்களின் வாழ்க்கையில் இருந்து அவர்களுடைய நித்திய இலக்கு தெளிவாக இருந்தது என்ற ஒரு வெளிப்பாட்டைப் பெற்றிருந்தார்கள். அப்போது உயிரோடிருந்த கிறிஸ்தவர்கள் அவர்களை **நினைக்கவேண்டும்**, அல்லது அவர்களை “நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்” (வினையின் காலம், கிரேக்க மொழியில் தேவைப்படுவது போல்), என்பது அந்த முந்தைய நடத்தினவர்களின் பண்புகளில் அவர்கள் வாழ வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. அதே வினைச்சொல் 2 தீமோத்தேயு 2:8-ல் “இயேசு கிறிஸ்துவை நினைத்துக்கொள்” என்ற அறிவுரையில் பவுலால் பயன்படுத்தப்பட்டது, யாருடைய பண்புகளைக் கடைபிடிக்க முயற்சிக்கிறோமோ அத்தகைய விசுவாசமுள்ள சகோதர சகோதரிகளை நாமும் நினைத்துக்கொள்ள முடியும்.

நடத்தினவர்கள் (ἡγέομαι, *ஹிஜீயோமை*) என்ற வார்த்தையின் படிவங்கள் “வழிநடத்த” அல்லது “அதிகாரத்துடன் கட்டளையிட” ஆகியவைகள் இந்த அதிகாரத்தில் மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன (பார்க்க வசனங்கள் 17, 24). இது எந்த அலுவலகத்தையும் அல்லது தலைவர்களையும் குறிப்பிடுவதற்குச் சாத்தியமற்ற ஒரு பொதுச் சொல்லாகும். அதே வார்த்தையின் மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைகள் “தலைவர்கள்,” “ஆட்சியாளர்” (மத். 2:6) மற்றும் “அதிகாரி” (அப். 7:10) என்பவைகளாகும். எனவே, உதாரணத்தின் மூலம் மட்டுமே வழிநடத்தும் ஒருவரை விட ஒரு வலிமையான செல்வாக்கு என்று *ஹிஜீயோமை* குறிப்பிடுகிறது.

அப்போஸ்தலர்களோடு கூட, வசனம் 7 **தேவவசனத்தை உங்களுக்குப் போதித்த** சுவிசேஷகர்களையும் குறிக்கிறது. பிரசங்கித்தல் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பொறுப்பாக இருந்தது, மேலும் அவருக்குக் கொடுக்கப்பட்ட கடமை “ஒரு சுவிசேஷகரின் ஊழியம்” (2 தீமோ. 4:2, 5). மூப்பர்கள் சிலர் “திருவசனத்திலும் உபதேசத்திலும்” பிரயாசப்படுகிறார்கள் என்பதால் அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் (1 தீமோ. 5:17). “இந்த வார்த்தை” சுவிசேஷ செய்தி முழுவதையும் உள்ளடக்குகிறது.

இந்த அறிவுரையைப் பெற்றுக்கொண்டவர்கள் தேவனால் நியமிக்கப்பட்ட கடந்த காலத்து அல்லது ஒருவேளை தற்போது சபையை நடத்துகிறவர்களுக்குச் சரியான மரியாதையைக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். அதிகாரத்திற்கான அவமதிப்பு, ஒரு தீவிர பாவமாகும். இந்த எபிரெயர்கள் சபையை நடத்துகிறவர்களுக்கு எதிராக முறுமுறுக்கவில்லை, ஆனால் அவர்கள் விசுவாசத்திலிருந்து விலகிச் சென்றார்கள் (2:1-4). ஆகவே எந்த வழியிலும், அவர்களுடைய நடத்தை அவர்களைக் கடுமையான ஆபத்தின் விளிம்பிற்குக் கொண்டு சென்றதால் அவர்களுக்கு இந்த நினைவூட்டல் தேவைப்பட்டது.

எபிரெயர் எழுதப்பட்ட காலத்தில் உயிரோடிருந்த தலைவர்களை வசனங்கள் 17 மற்றும் 24 குறிக்கின்றன. ஒருவேளை வசனம் 7, அப்போஸ்தலர் 8:1-4 இன்படி அப்போஸ்தலர்களையும், மூப்பர்களையும், உபத்திரவத்தின் மத்தியிலும் எருசலேமில் தங்கியிருந்த வேறு சிலரையும் குறிப்பிடலாம். சபையின் அங்கத்தவர்கள் பலர் தப்பி ஓடியபோது அவர்கள் அங்கு தங்கினர். பவுல் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட போது திரும்பிச் செல்ல இவ்வாறான ஒரு சபை இருந்தது, மேலும் நிலைமை அமைதியாக இருந்தது (அப். 9:31). ஆபேலின் வாழ்க்கை இன்னும் பேசுகிறது போல், அவர்களுடைய வாழ்க்கையும் உறுதியான விசுவாசத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது (எபி. 11:4).

வார்த்தையை முதன்முதலில் உறுதி செய்தவர்களும் (2:3),

மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாய் இருந்தவர்களும் இந்த ஆரம்பகால சபைத் தலைவர்களே.[23] இதன் விளைவாக, வாசகர்கள் அவர்களது விசுவாசத்தின் தன்மையையும், மரணத்திற்குப் பின் அவர்களது வெகுமதிக்கான ஒரு இன்பமாக "அவர்களுடைய நடத்தையின் பலனையும்" நினைவுபடுத்த வேண்டும். நன்றாய்ச் **சிந்தித்து** என்ற சொல் "மேலோட்டமான ஆய்வு என்பதற்கு முற்றிலும் எதிர்மாறாக இருக்கிறது."[24] எப்படி இந்த முன்மாதிரியான தலைவர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பதும், அந்த வாழ்க்கை அவர்களது நித்தியத்திற்கு என்ன பொருள் தந்தது என்பது பற்றியும் சகோதரர்கள் கவனமாகச் சிந்திக்க வேண்டியதாய் இருந்தது. "பலன்," "விளைவு," அல்லது "முடிவு" ஆகியவைகளுக்கான (ἔκβασις, எக்பாஸிஸ்) என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் "தப்பிக்க வழி" அல்லது "வெளியே செல்லும் வழி." என்று மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு 1 கொரிந்தியர் 10:13 இல் இடம் பெற்றுள்ளது தவிர வேறு எங்கும் காணப்படவில்லை. வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளையும் கையாள்வதில் நாம் தேவனுடைய வழியைப் பின்பற்ற வேண்டும். 13:7ன் சூழலில் எக்பாஸிஸ் அத்தகைய விசுவாசமுள்ள வாழ்க்கைக்கான இறுதி முடிவை சுட்டிக்காட்டுகிறது.

மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாய் இருந்த முன்னாள் தலைவர்களை நாம் நினைக்கும்போது, அவர்களது ஆவி ஏதோ ஒருவிதத்தில் நம்முடன் நீடித்து நம்மைச் சிறந்த கிறிஸ்தவர்களாக்குகிறது. இது பற்றி வாசிப்பதற்கும், வேதவாக்கியங்களில் விசுவாசத்தின் பெரும் வீரர்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கும் இது ஒரு நல்ல காரணம். நாம் வாசித்து அல்லது மற்றவர்கள் மூலம் கேள்விப்பட்டவர்களை விட நாம் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கிற விசுவாசமும் பக்தியும் கொண்ட மக்களைப் பற்றிய நினைவு நம்மீது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

இங்கு குறிப்பிட்டுள்ள தலைவர்கள் தங்கள் உத்தரவாதத்திற்கான தொடக்கத்தைக் கெட்டியாய்ப் பிடித்திருந்தார்கள்; அவர்கள் இறுதி வரை உறுதியாக இருந்தார்கள் (3:14). அவர்களுடைய **விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்** என்று எபிரெயர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள் (μιμέομαι, *மிமியோமை*) என்ற வார்த்தையிலிருந்து வந்த "பின்பற்றுங்கள்" என்பது "பின்பற்றுகிறவர்" என்பதற்கு ஒத்த வார்த்தையாகும். இது 1 கொரிந்தியர் 11:1ல் பவுலால் பயன்படுத்தப்பட்டது. போல, "பின்பற்ற," "அபிநயம்," "போலி" ஆகியவற்றை உள்ளடக்கிய பல ஆங்கிலச் சொற்களை அதிக பயன்பாட்டில் பார்க்கிறோம்.

"அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" என்பதற்கு என்ன பொருள்? அநேகமாக, தலைவர்கள் கிறிஸ்துவின்

போதனைகளுக்கு இசைவாக எவ்வாறு வாழ்ந்து மரித்தார்கள் என்பது பற்றிய விவரங்களையும், நினைவுகூர வேண்டும் என்பதற்காக ஆசிரியர் கிறிஸ்தவர்களை ஊக்குவித்தார். அவர்களது வழிபாட்டு முறைகளிலும், நம்பப்பட வேண்டும் என்ற கோட்பாடு அல்லது போதனையான எபேசியர் 4:5ன் "ஒரே விசுவாசம்" என்பதின் மீதான அன்றாட நடவடிக்கைகளின் அடிப்படையிலும் அவர்களுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.[25] இது, எல்லாக் கிறிஸ்தவர்களும் பின்பற்றுவதற்கான ஒரு சிறந்த உதாரணம்.

பின்பற்றுதல் என்பது பாராட்டிற்கான மிக உயர்ந்த வழி என்று இது கூறுகிறது. ஒரு இளம் போதகராக, நான் மதிக்கும் சில சகோதரர்களைப் பின்பற்ற முயன்றேன். அவர்களது பாணிகளில் சிலவற்றை என் சொந்தமாக மாற்றியமைத்தேன். கிறிஸ்துவைப் பின்பற்றுவது (1 கொரி. 11:1) நம்முடைய கர்த்தருக்கு நாம் கொடுக்கத்தக்க பெரிய மரியாதை.

**13:8-16**

**8இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். 9பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். போஜனபதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது; போஜனபதார்த்தங்களில் முயற்சி செய்கிறவர்கள் பலனடையவில்லையே. 10நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை. 11ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப்புறம்பே சுட்டெரிக்கப்படும். 12அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். 13ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம். 14நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். 15ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். 16அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

**வசனம் 8. இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும்**

**மாறாதவராயிருக்கிறார்** என்பது அனேகமாக, எபிரெயரின் வசனங்களில் நன்கு அறியப்பட்ட வசனமாகும். தலைமுறைகளின் நேசத்துக்குரிய முன்னாள் மூப்பர்கள் மரித்திருக்கின்றனர், ஆனால், இவர்களால் இனிமேலும் செய்ய முடியாத சேவையையும் உதவியையும் தொடர்ந்து நமக்குச் செய்து கொண்டிருக்கிற உயிரோடிருக்கும் ஒருவரை நாம் கொண்டுள்ளோம். "நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை" என்று அவருக்கான சங்கீதம் 102:27ன் வார்த்தைகளை எபிரெயர் 1:12 பயன்படுத்தியிருக்கிறது.

பழைய ஏற்பாடு தேவனைப் பற்றி இவ்வாறு கூறுகிறது: "முந்தினவராயிருக்கிற கர்த்தராகிய நான்தானே; பிந்தினவர்களோடும் இருப்பவராகிய நான்தானே" (ஏசாயா 41:4; காண்க 44:6). இங்கு எபிரெயரில் அதே வார்த்தைகள் கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில், கிறிஸ்து "முந்தினவரும் பிந்தினவரும்" ஆக இருக்கிறார் என்பதால் அங்கு முன்னுக்குப்பின் முரணானது எதுவும் இல்லை (வெளி. 1:17). நமக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார் (எபி. 7:25). அவரது நித்தியமான இயல்பு அவருடைய தெய்வீகத் தன்மையை உறுதிப்படுத்துகிறது.

இயேசு பூமியில் இருந்தபோது சிறிது காலத்திற்குத் தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி. 2:6-8); ஆனால் அவர் இப்போது பரலோகத்தில் "எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டு" இருக்கிறார். அவர் எப்போதும் ஒரே நிலையில் இல்லாவிட்டாலும் எப்போதும் ஒருவராகவே இருந்திருக்கிறார். உண்மையில், அவருடைய மனித அவதாரம் பரலோகத்தில் அவர் கொண்டிருக்கிற ஸ்தானத்தைவிடத் தாழ்ந்ததாக இருந்தது. அவர் ஒருகாலத்தில் பரலோகத்தில் "ஐசுவரியமுள்ளவராயிருந்தார்"; ஆனால் மனிதகுலத்தோடு பகிர்ந்து கொள்ளவும் பாடுபடவும் அதை விட்டு விட்டு தரித்திரரானார் (2 கொரி. 8:9). அவர் இப்பொழுது "பரலோகத்தில் நம்முடையவர்."[26] அவர் பூமியில் இருந்தபோது, இரண்டாம் வருகைக்குப் பிதா குறித்திருந்த காலத்தை அவர் அறியாதபடிக்கு ஞானத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார் (மத். 24:36; மாற்கு 13:32).[27]

**வசனம் 9.** 8 மற்றும் 9 ஆகிய வசனங்களை நாம் ஒன்றாக இணைத்தால், அதே கோட்பாடுகளை அல்லது போதனைகளை நாம் வைத்துக்கொள்ள வேண்டும் மற்றும் புதிதாக வருகிற கருத்தை நாம் பொருட்படுத்தவேண்டாம் என்பது தெளிவாகிறது. இயேசு குறிக்கோளிலும், போதனையிலும் மாறாதவராக இருக்கிறார். கிறிஸ்துவைப் பற்றிய நமது போதனையும், சரியாக விளக்கப்பட்டு அதேபோல இருக்க வேண்டும். அவருடைய வார்த்தையின் சத்தியத்திலிருந்து அவர் தடுமாற்றம் அடையவில்லை என்பதால்,

அதைப் பின்பற்றுவதில் இருந்து நம்முடைய மார்க்கத்தை மாற்றக்கூடாது (1 கொரி. 15:58). வசனம் 9ல் உள்ள அறிவுரை வசனம் 8ல் உள்ள கூற்றின் இயல்பான தொடர்ச்சியாகும்.

கிறிஸ்தவச் சரித்திரத்தின் ஆரம்பகாலத்தில் கூட, **பலவிதமான அந்நிய போதனைகளால்** (பன்மை) சிக்கல் இருந்தது. "பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாய்" நாம் இருக்கக்கூடாது (எபே. 4:14).[28] "அந்நிய" என்பது ξένος (*ஜெனொஸ்*), என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டு "புறம்பான" என்னும் பொருள் தருகிறது. சுவிசேஷத்திற்குப் "புறம்பான" அனைத்தையும் நாம் நிராகரிக்க வேண்டும். கிறிஸ்து மாறாதவராயிருக்கிறார் என்பதால், எபிரெய கிறிஸ்தவர்கள் தேவனுடைய கிருபையினைக் குறித்தும், அவர் மனிதகுலத்தை எவ்வாறு மீட்டெடுத்தார் என்ற செய்திக்கு மாறான செய்தியை ஏற்றுக்கொள்ள தங்கள் மனதை அனுமதிக்கவில்லை. "கிறிஸ்துவின் உபதேச சட்டம்" ஒன்று இருக்கிறது, அது நாம் பாவத்தினின்று விடுதலையாக்கப்படுவதற்குக் கீழ்ப்படிவதாகும் (ரோமர் 6:17, 18).[29]

தேவனுடைய கட்டளைகள் எவ்வாறு மாற்றப்பட்டிருப்பினும் இயேசு மாறக்கூடியவர் அல்ல. குறிப்பிட்ட சில **போஜனபதார்த்தங்களைப்** புசித்தல் அல்லது புசியாமல் இருத்தல் போன்றவை பிரமாணத்தின் நிபந்தனைகள். இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடைமுறைப்படுத்துவது, ஒரு மனிதனைச் "சுத்தமானவன்" என்று கருத அனுமதித்தது; அந்தக் கட்டளைகளைப் புறக்கணிப்பது அந்த மனிதனை "அசுத்தமானவன்" என்று எண்ணச் செய்தது. அந்தச் சட்டங்கள் இனிமேல் பொருந்தாது. புறஜாதிகளும் தனிப்பட்ட போஜன பிரமாணங்களைக் கொண்டிருந்தனர்.[30] மாற்கு 7:19ல் இயேசு எல்லாப் போஜனங்களும் சுத்தமானது என்று அறிவித்தார். வழக்கற்றுப் போன ஒழுங்குமுறைகளான குறிப்பிட்ட போஜனங்களைப் புசித்தல் அல்லது புசியாமல் இருத்தல் என்பது நம்மைச் சிறந்த கிறிஸ்தவர்களாகச் செய்வது இல்லை. கர்த்தர் மாறாதவராக இருந்தபோதிலும், அவரது பிரமாணங்கள் மாற்றப்படக் கூடியவைகள். அப்படியானால் புதிய உடன்படிக்கையின் ஒழுங்கு முறைகள் மாற்றப்படலாம் என்பது பொருள் அல்ல. வேதாகமத்தின் கொள்கைகளையும் வழிகாட்டுதல்களையும் மாற்றுவதற்கு சபையாகிய நமக்கு உரிமை இல்லை.

"பலவிதமான அந்நிய போதனைகள்" எவை எவைகள் என்பது பற்றிக் குறிப்பிடப்படவில்லை. எனினும், யூதேயர்களுக்கு அந்தப் போதனை தேவைப்பட்டது என்பது நமக்குத் தெரியும். அவர்கள் புறஜாதி கிறிஸ்தவர்களை விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவும் யூதர்களின் மரபுச்சட்டப்படி தயாரித்த போஜனபதார்த்தங்களை உட்கொள்ளவும் கட்டாயப்படுத்த முயற்சி செய்தனர் (கலா. 5:2-6).

தேவனுடைய ராஜ்யத்தின் உண்மையான இயல்பு புசிப்பது, குடிப்பது ஆகியவற்றின் ஒழுங்குமுறைகளில் காணப்படவில்லை (ரோமர் 14:17; 1 கொரி. 8:8).

நாம் போஜனபதார்த்தங்களின் பிரமாணங்களினால் அல்ல **தேவனுடைய கிருபையினாலே ஸ்திரப்படுகிறோம்**. மாறாக, "போஜனபதார்த்தங்கள்" அல்ல "கிருபையே" ஆவிக்குரிய வளர்ச்சியை அதிகப்படுத்துகிறது. சுவிசேஷத்திற்கு மேலாகப் பிரமாணங்களை வைப்பது, "நேற்றும் இன்றும் என்றும் மாறாத" இயேசு கிறிஸ்துவின் முக்கியத்துவத்தைக் குறைக்கிறது. நியாயப்பிரமாணத்தின் சில விவரங்கள் இப்போது முக்கியத்துவம் இல்லாதவையாக இருக்கின்றன, ஏனென்றால் அவைகள் புதிய உடன்படிக்கைக்குள் கட்டுப்படவில்லை.

9-ஆம் வசனத்தில் "கிருபை" என்பது தேவனால் கொடுக்கப்பட்ட உண்மையான போதனையைப் பரவலாகக் குறிக்கிறது. "கிருபையினால் ஸ்திரப்படவேண்டும்" என்பது நம்மைத் தவறான போதனையிலிருந்து காப்பாற்றுகிறது. எபிரெயர்களின் முற்பிதாக்கள் தேவனுடைய "சத்தத்திற்குச்" செவிகொடுக்காமல் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி இருந்தார்கள் (சங். 95:7-9; எபி. 3:7-11, 15; 4:7), ஆனால் அவர்களுடைய சந்ததியார் தேவனுடைய வார்த்தை மூலம் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால். "கிருபையினால் ஸ்திரப்படுவார்கள்." "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே *ஜீவனம்பண்ண வேண்டும்*" என்று தீத்து 2:11, 12 நமக்குத் தெரிவிக்கிறது (அழுத்தம் சேர்க்கப்பட்டது). கிருபையானது நாம் போதிக்க வேண்டிய சத்தியமாக இருக்கிறது. "கிருபையினால் இரட்சிப்பு" என்பதைப் புரிந்து கொள்வது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்; நாம் ஒன்றைப் புசிப்பதினால் அல்லது ஒன்றை நாமாகவே புசிக்க மறுப்பதினால் அதைப் பெற்றுக் கொள்ள முடியாது.

மத்தேயு 6:16-18ன் படி விளம்பரத்தை அல்லது தன்னைப் பற்றிப் பொதுமக்களின் கவனத்தைத் தேடாத ஒருவருடைய உபவாசம் நன்மையானதும் ஆரோக்கியமானதுமாகும். சில சரீர பலவீனங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு உபவாசித்தல் கூடாது. இதன் காரணமாகப் புதிய ஏற்பாட்டில் எந்தப் பகுதியிலும் உபவாசம் கட்டாயமாக்கப்படவில்லை. சிறப்பான ஆவிக்குரிய தனிப்பட்ட காரணங்களுக்காக உபவாசிக்கும்போது இது பயனுள்ளதாக இருக்கிறது, ஆனால் இது தாமாகவே முன்வந்து செய்கிற நடவடிக்கையாகும்.

**வசனம் 10.** அனேகமாக, கிறிஸ்தவ யூதர்கள் பலிசெலுத்தலில் பங்கு பெறுவதற்கான உரிமை மறுக்கப்படும் நிலையில் இருந்தார்கள்.

குறிப்பாக இயேசுவை மேசியாவாக விசுவாசித்த அந்த ஆசாரியர்களை இது பாதித்திருக்க வேண்டும் (அப். 6:7). அவர்கள் வெளியேறி இருந்தார்கள் என்று உணர்வதற்குப் பதிலாக, எபிரெய கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய "பந்தியில்" **புசிக்கிறதற்கு** அல்லது அவரது இரத்தம் கொண்டிருக்கும் ஆசீர்வாதத்தில் பங்கு பெறுவதற்கு **அதிகாரமில்லாத** அவிசுவாசியான யூதர்களுக்காக அனுதாபம் கொண்டிருந்திருக்க வேண்டும்.

நடைமுறையில் "யூதேயாவின் எந்தப் பலிபீடத்தையும் விட மேன்மையான ஒன்றை நாம் கொண்டுள்ளோம், எல்லாரும் அந்தப் பலிபீடத்தில் பங்கு கொள்ள முடியாது," என்பது வசனம் 10ல் உள்ள கூற்றின் பொருளாகும். **பலிபீடம்** என்பது என்ன? அது ஆவிக்குரியது என்று வசனம் 15 தெளிவுபடுத்துகிறது. "பலிபீடம்" என்பது நமக்கு ஊட்டமளிக்கிற உண்மையான ஆசீர்வாதத்தைக் கொடுக்கிற கிறிஸ்துவை அல்லது அவருடைய பலியைக் குறிக்கிறது.[31] அவருடைய பலியில் பங்கு பெறுதல் என்பது கிறிஸ்துவாகிய அவரிடத்திலேயே பங்கு பெறுதல் ஆகும்.[32] "மாம்சத்தின்படியான இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா?" (1 கொரி. 10:18) என்றும், "பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டு" என்று 1 கொரிந்தியர் 9:13ல் பவுல் கூறியிருக்கிறார்.

நம்முடைய வாராந்திர ஐக்கியத்தில் கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருவதன் மூலமாகத் தொடர்ந்து அவரை ஆராதிக்கிறோம்.[33] நாம் அஜாக்கிரதையாகவோ அவ்வப்போதோ அல்லாமல், ஒரு முக்கிய வழிபாட்டு நடவடிக்கையாக மிகவும் பயபக்தியோடு அதில் பங்கேற்க வேண்டும். ஆசாரியர்கள் பலியிடப்பட்ட மிருகங்களைப் புசித்தார்கள்; என்றாலும்கூடத் தேவனுடைய பலிபீடத்தின் மீதான கிறிஸ்துவுடைய பலியின் நன்மைகளில் பங்கு கொள்ளுகிற நாம் அவரிலுள்ள ஆசீர்வாதத்தில் பங்கடைகிறோம். யூத மதத்தில் தொடர்ந்திருந்து, இரட்சிப்பிற்காக நியாயப்பிரமாணத்தின் சடங்குகளைச் சார்ந்திருப்பவர்களுக்கு இந்த மேன்மையான பலிபீடத்திலோ, கிறிஸ்தவத்தின் நன்மைகளிலோ உரிமை கிடையாது. யூதர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்கு (கூடாரம் அல்லது ஆலயம்) ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி வந்தது போலக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் நன்மைகளில் பங்கு கொள்ள ஒன்றுகூட வேண்டும்.

பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையேயான முரண்பாடுகள் இங்கு தொடருகின்றன. பழைய ஏற்பாட்டுப் பலிகளில் உறுதியாக இருக்கும் யூதர்கள் புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது. நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ளவர்களுக்கு "புசிப்பதில் உரிமை இல்லை" என்ற உண்மை

கிறிஸ்தவத்தின் பிரத்தியேகத்தன்மையைக் காட்டுகிறது. மேலும், தேவனுடைய விசேஷித்த ஐக்கியத்தில் இருக்கும் பாக்கியத்தை ஒருவன் இழந்து யூதேயத்திற்குத் திரும்பிச் செல்லும் மற்றொரு ஆபத்தையும் இது சுட்டிக்காட்டுகிறது. எனவே, நாம் "போஜனபதார்த்தங்கள்"[34] என்று பொருள் கொள்ளும்போது, நிறைவான "மேஜை" என்று நாம் பேசுவதுபோல், "பலிபீடம்" என்பது பண்பாகு பெயரில் "பலி" என்று குறிப்பிடப்படுவது சாத்தியம். கிறிஸ்தவத்தின் அனைத்து முக்கியக் காரியங்களும் ஆவிக்குரியவை என்பதால், நிச்சயமாகக் காணப்படும் பொருளிலான பலிபீடத்தை நாம் கொண்டிருக்கவில்லை. ஒரு சபை கூடும் மண்டபத்தின் முன்னால் ஒரு மேஜை, நீண்ட இருக்கை அல்லது கம்பி அமைத்து, "பலிபீடம்" என்று கூறுவது ஒரு தவறான சொல் வழக்காகி, நமது கிறிஸ்தவ "பலிபீடம்" என்பதன் தன்மையை இழந்து விடுகிறது.

**வசனங்கள் 11-13.** பாவநிவாரண நாளிலே பாளயத்திற்குப் புறம்பே மிருகங்கள் எரிக்கப்படுகிற கருத்து அறிமுகப்படுத்தப்படுகிறது. பாவநிவிர்த்திக்கென்று பலியிடப்பட்ட காளை **பாளயத்துக்குப் புறம்பே** கொண்டு வரப்படுகிறது (காண்க லேவி. 16:27).[35] இயேசு நகர **வாசலுக்குப் புறம்பே** சிலுவையில் அறையப்பட்டது[36] (வசனம் 12; காண்க யோவான் 19:20) அந்த அடையாளத்தை நிறைவு செய்தது. குற்றத்தின் களங்கத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் ("நகர வாசலுக்குப் புறம்பே" என்பதன் சாத்தியமான பொருள்) இயேசு நம்முடைய பாவங்களைச் சுமந்தார். **பாளயத்திற்குப்** புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டு (வசனம் 13) என்பது ஜெபஆலயங்களிலும், ஆலயங்களிலும் இருந்து முற்றிலுமாகப் பிரிந்து செல்வதைத் தெரிவிக்கிறது. நாம் அகற்றப்பட்டவர்களாக நம்முடைய கர்த்தரைப் போல அதே நிந்தையைச் சுமக்க வேண்டும். இயேசு செய்த அதே பலியை நாம் நிச்சயமாகச் செய்யவில்லை; ஏனென்றால் அவருடைய பலி "ஒரே தரமானது" (7:27) நம்முடைய பலி தொடர்ச்சியானது. நமது பலி தேவனைப் புகழ்வதையும், அவரது நாமத்தை வெளிப்படையாக அறிக்கை செய்வதையும், இரக்கமுள்ள கிரியைகளைச் செய்வதையும், தானதர்மம் செய்வதையும் கொண்டிருக்கிறது (13:15, 16). வேறு விதமாகக் கூறினால், நாம் நமது விசுவாசத்தைப் பொது ஆராதனைகளில் காண்பிக்க வேண்டும், மற்றவர்களை மாற்ற முயற்சி செய்ய வேண்டும், தேவையானவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட பலிகள் தேவனைப் பிரியப்படுத்துவதாக இருக்கின்றன.

யூத மார்க்கத்தின் பெருமை கடந்து விட்டது, யூத கிறிஸ்தவர்கள் "பாளயத்திற்குப் புறம்பே" சென்று, பிரமாணத்தின் அனைத்துக் கட்டுகளில் இருந்தும் விடுபட வேண்டியதாக இருந்தது (வசனம் 13). இது எபிரெயரின் இறுதி வேண்டுகோளைச் சுருக்கமாகக் காட்டுகிறது. மீண்டும் நிருப ஆசிரியர் **செய்யக்கடவோம்** என்னும் அறிவுரையுடன்

தொடங்குகிறார். வெறும் உண்மையின் வடிவத்தை மாத்திரம் கொண்டதை விட்டு, கிறிஸ்து இயேசுவில் மட்டுமே கிடைப்பவற்றைத் தழுவ அழைத்தார். மறைந்துகொண்டிருக்கும் மதத்தை[37] விட்டு வெளியேற ஒரு வலிமையான வாதத்தை அவர் வைத்தார். “பாளயத்தை விட்டு வெளியே செல்லுதல்” என்பது மிருகங்களின் பலியையும், உட்குறிப்பாக யூதமதம் சம்பந்தப்பட்ட அனைத்தையும் விட்டு விலகுவது என்று பொருளாகும்.

பாவநிவிர்த்திக்கென்று பலியிடப்பட்ட மிருகங்கள் இஸ்ரவேலரின் “பாளயத்துக்குப் புறம்பே” **எரிக்கப்பட்டது** போல (வசனம் 11), கிறிஸ்துவும் நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார் (வசனம் 12). எருசலேமுக்கு வெளியே கொல்லப்பட்டார் என்பது கிறிஸ்துவுடைய மரணத்தின் களங்கத்தை அதிகப்படுத்தியது.[38] குற்றவாளிகளும் தூஷிக்கிறவர்களும் அங்குதான் கொல்லப்பட்டனர். எபிரெயர்கள் அவருடைய நிந்தையைத் தாங்கிக்கொள்வதில் **பங்குபெறத் தயாராக இருந்தனர்** (வசனம் 13). இதை அவர்கள் எவ்வாறு செய்தார்கள்?

> எபிரெயரின்படி மக்கள் தாங்களாகவே விலகி கண்டனத்தைச் சகிக்கவில்லை, ஆனால் கிறிஸ்துவின் மூலம் தேவனை ஸ்தோத்தரித்தார்கள்: மற்றவர்களிடமிருந்து பகைமை இருந்தாலும் கிறிஸ்தவச் சமுதாயத்திற்குச் சேவை செய்து, அந்நியர்களையும், காவலில் வைக்கப்பட்டவர்களையும், ஒடுக்கப்பட்டவர்களையும் உபசரித்தனர்.[39]

தேவையில் இருப்பவர்கள், சமுதாயத்தால் நிராகரிக்கப்பட்ட அல்லது மறந்துவிடப்பட்டவர்களை உபசரிப்பதன் மூலம் யூத கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் நிந்தையைச் சுமக்க முடிந்தது.

இன்று சிலர் “யேசுவா யூதர்களாக” (“இயேசு யூதர்கள்”) விரும்பி, இன்னும் பல யூத பழக்க வழக்கங்களைக் காத்து வருகிறார்கள். அவர்கள் இரட்சிப்பை அடைவது அல்லது காத்துக் கொள்வதற்கான ஒரு வழியாக அல்லாமல் - யூதர்களுக்கு யூதராக இருப்பதற்கு (காண்க 1 கொரி. 9:20, 21) யூத பழக்கவழக்கங்களை மட்டுமே கலாச்சார ரீதியாகக் கடைப்பிடித்தால் - அப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கிறிஸ்தவர்களாக இருப்பது சாத்தியமாக இருக்கலாம். எனினும், இன்று இரட்சிப்பை நாடும் அனைவரும் கிறிஸ்துவை மட்டுமே அவர்களுடைய இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும். ஒருவன் பழைய ஏற்பாட்டு கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் தேவனைப் புகழ முடியாது. இரட்சிக்கப்படுவதற்கு அதன் ஒழுங்குமுறைகள் இனிமேலும் தேவை இல்லை. அவைகளைக் கட்டுவது புறஜாதி கிறிஸ்தவர்களை விருத்தசேதனம் பண்ணும்படி கூறி கிருபையினின்று விழுந்தவர்களுடன் சேர்ந்து கொள்வதாகும் (கலா. 5:1-6). யூத சமய பின்னணியைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் பஸ்கா பழக்கவழக்கங்களைக்

கடைப்பிடிக்க விரும்பலாம், ஆனால் இந்தச் சுவடு தேவனுடைய பிரமாணத்தின் ஒரு பகுதியாகத் தொடர்கிறது என்ற எண்ணம் கிறிஸ்துவின் அதற்கான நிறைவேற்றத்தை மறுக்கிறது (மத். 5:17, 18; 1 கொரி. 5:7). கிறிஸ்து நமது பஸ்கா, அவர் அதை நிறைவேற்றி பழமையானதை எடுத்துப் போட்டார் (1 கொரி. 5:7).

தேவாலயத்தில் இருந்த சில மனிதர்களைச் சுத்திகரிப்பதற்கான செலவை செலுத்தி, அவர்களோடு சேர்ந்து தொழுது கொள்ளும்போது சில பழக்க வழக்கங்களைப் பவுல் கடைப்பிடித்தார் (அப். 21:20-26). தீமோத்தேயு பாதி யூதனாயிருந்த போதிலும், யூத ஜனங்கள் தீமோத்தேயுவை ஏற்றுக்கொள்வதற்காக அவனை விருத்தசேதனம் பண்ணுவித்தார் (அப். 16:1-3). அந்தப் பழக்கத்தைப் புறஜாதியானாகிய தீத்துவின் மேல் பிணைக்கும் முயற்சியைப் பவுல் எதிர்த்தார் (கலா. 2:3). கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் அல்லாமல் கிருபையினால் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று அப்போஸ்தலன் அறிந்திருந்தார். ஒருவேளை ஒரு யூத கிறிஸ்தவன் இன்று அதே கொள்கைகளைப் பின்பற்றலாம், ஆனால் நாம் பழைய ஏற்பாட்டு வழிபாட்டு முறைமைகளைப் புதிய ஏற்பாட்டு சபைகளுக்குள் கொண்டுவர முடியாது.[40]

புதிய ஏற்பாட்டு நாட்களில், யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் இடையே பழக்க வழக்கங்களில் அல்லது முந்தைய நாட்களின் பிணைப்புச் சட்டங்களில் ஒரு பெரிய வித்தியாசம் இருந்தது, அந்த வேறுபாடு, இன்று குறிப்பிடப்பட வேண்டும். யூத மதத்தின் “பாளயத்திற்குப் புறம்பே” செல்ல வேண்டும் என்பது அனைவருக்கான பாதுகாப்பான நடைமுறையாகும். யூத மதத்தின் உறவுகளை முறித்துக்கொள்ள வேண்டும் என்று எபிரெயர்களை ஆசிரியர் எச்சரித்தார்.[41]

**வசனம் 14.** வரவிருக்கும் அந்த நகரத்தின் வீழ்ச்சி பற்றிய கிறிஸ்துவின் போதனையிலிருந்து அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தியிருந்த பார்வையின்படி, எருசலேமின் “முகாமுக்குள்” அடைக்கலம் தேடுவது மடமை. எருசலேம் நிலைத்திருக்க முடியாது, மேலும் அது நிச்சயமாக வழிபாட்டிற்குத் தேவனுக்குப் புனிதமான ஒரு பரிசுத்தமான இடமாக இருக்க முடியாது என்று இந்த வசனம் கூறுகிறது. ஒரு சில சரிந்து விழுந்த கற்கள் மட்டுமே தேவாலயத்தில் எஞ்சியிருந்தவை. நின்று கொண்டிருக்கும் முதல் நூற்றாண்டு அமைப்பில் மீந்திருப்பது ஏரோதின் ஆலயத்து வெளிப்புறச் சுவர் மட்டுமே. அதன் ஒருபகுதி இப்போது “அழுகைச் சுவர்” என்று அழைக்கப்படுகிறது.

**நிலையான நகரம்**[42] நமக்கு இங்கே பூமியில் இல்லை. விரைவில் இந்த “நகரம்” போய்விடும் என்றும், அதை விட்டுச் செல்வது என்றும் உணர்வது, ஆபிரகாம் பார்த்துக் கொண்டிருந்த நிலையானதும்

சிறந்ததுமான நகரத்தில் விசுவாசத்தைக் காட்டுவதாக இருந்தது. இது நிலையான அஸ்திபாரமுள்ள - பரலோக நகரமாகும் (எபி. 11:10, 16). பூமியில் உள்ள அனைத்து நகரங்களும் “அசைக்கக்கூடியவைகளின்” ஒரு பகுதியாகும் (எபி. 12:27). ஒருவர் தனது தாயகத்தை நேசிப்பதோ அல்லது அதன் தலைவர்களை நம்புவதோ அவரது ஆத்துமாவிற்கு நிரந்தர ஓய்வைக் கொடுக்க முடியாது.[43] தேவனுடைய நித்திய நகரத்தில் நம்பிக்கை வைத்திருப்பது நமக்குத் தேவையான திருப்தியை அளிக்கிறது.

**வசனம் 15.** சிலர் தேவனுக்கான தங்களது பொது வழிபாட்டையும், துதிப்பதையும் புறக்கணித்தார்கள் என்ற கருத்தை இந்த உரை கொடுக்கிறது (10:25 மீதான கருத்துக்களைப் பார்க்கவும்). அவர்கள் வழிபடுவதால் அல்லது பொதுமக்களிடம் தங்களது நம்பிக்கையை ஒப்புக் கொள்வதால் வரும் துன்புறுத்துதலுக்கு அவர்கள் பயந்திருந்திருக்கலாம்.

அவரது போதனை முடிவதற்கு முன், கிறிஸ்தவர்களின் “ஆசாரிய” ஊழியத்திற்கு ஆசிரியர் மற்றொரு குறிப்பைக் கொடுத்தார். இது இந்த நிருபத்தில் கடைசியான **நாம் செய்யக்கடவோம்** என்ற அறிவுரையாகும். அனைவரும் துதியின் பலிகளைச் செலுத்த வேண்டும். நமது உதடுகளால் துதிப்பது தேவனுக்கு முக்கியமானது, ஆனால் அது போதாது. நம்முடைய விசுவாசத்தில் நாம் வாழவும் பகிரவும் வேண்டும். மனிதனால் உருவாக்கப்பட்ட மனிதர்களின் பலிபீடத்திலிருந்து நம்முடைய வழிபாட்டின் பலி வரவில்லை, ஆனால் தேவனை மகிமைப்படுத்தும் வார்த்தைகளை நம் இதயங்களிலிருந்து கொண்டுவருகிற **உதடுகளின் கனிகளின்** வழியாக வருகிறது. ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் பலி செலுத்தாமலும், பலிபீடமில்லாமலும் குற்றம் சாட்டப்பட்டனர். நிச்சயமாக, அவர்களிடம் செலுத்துவதற்கு இன்னும் பலிகள் இருந்தன, ஆனால் **அவர்மூலமாய்ச்** செலுத்தப்பட வேண்டிய ஆவிக்குரிய பலிகளாக அவைகள் இருந்தன (பார்க்க ரோமர் 12:1, 2). இந்தச் சொற்றொடரில் அவர்களின் தொடர்ச்சியான **ஸ்தோத்திரபலிக்கான** பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அது கிறிஸ்துவின் மூலம் செய்யப்பட வேண்டும், எந்த யூத பலிக்கான ஒழுங்கு மூலம் அல்ல.[44] இயேசுவை விசுவாசித்த ஆசாரியர்களுக்கு இதை நினைவுபடுத்த வேண்டியதாய் இருந்தது. “எதிர்காலத்தில் அனைத்து பலிகளும் நிறுத்தப்படும்; ஆனால் துதிப்பது நிறுத்தப்பட மாட்டாது” என்று பழைய ஏற்பாட்டின் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட யூதமதக் குருக்கள் கூறினார்கள்.[45]

நாம் கிறிஸ்துவுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றால், நாம் தொடர்ச்சியாகத் துதிக்க வேண்டும்! இதுவே எபிரெயர் 12:28ன் “ஏற்கத்தக்க ஆராதனை.” “உதடுகளின் கனிகள்” என்பது ஓசியா 14:3ல் இருந்து வந்த அவருடைய **நாமத்தைத் துதிப்பது**

ஆகும் (14:2; செப்துவஜிந்த்). "நன்றி செலுத்துதல்" அல்லது "அறிக்கை" பண்ணுதல் - ὁμολογέω (*ஹோமோலோகியோ*) என்ற வார்த்தை இவை இரண்டில் ஒன்றை குறிக்கலாம் - இது நிகழ் காலமாக இருந்து, தொடர்ந்து செய்யப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது.

குரலினால் அல்லது வாய்மொழியினால் புகழ்வது ஒரு பலியாகக் கணக்கிடப்படுகிறது. இசை ஒலிகள் குரலாக இருக்கலாம் ஆனால் வாய்மொழி அல்ல; வெறுமனே வாயினால் ஒலி எழுப்புவது அர்த்தமுள்ள விதத்தில் "ஒருவருக்கொருவர் பேசுகிறது" அல்ல (எபே. 5:19). அன்பிற்கானதும், நன்றியறிதலுக்கானதுமான வார்த்தைகள் பலிகளைவிட மேலானது. கிறிஸ்துவின் பலியால் மிருகங்களின் பலிகள் நிரந்தரமாக வழக்கற்றுப் போனது. வழிபடுதலை பலியாக எண்ணுகிற கருத்து சங்கீதம் 50:12-15-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

**வசனம் 16.** கொடுப்பது என்பது இங்கு **தானதர்மம்பண்ணுதல்** (κοινωνία, *கொய்நொனியா*) என்று அழைக்கப்படுகிறது. இது ரோமர் 15:26-ல் குறிப்பிடப்பட்டுள்ள "பொருள் சகாயம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையாகும். *கொய்நொனியா* ("ஐக்கியம்") ஒரு உண்மையான பலியாக இருப்பதற்கு நம்முடைய கொடுப்பது என்பது ஒரு "கூட்டுப் பங்கு" ஆக இருக்க வேண்டும். ஈகைக் குணத்தின் செயல்கள் நமது "ஜீவபலியின்" ஒரு பாகமாக இருக்கின்றன (ரோமர் 12:1). உதவி தேவைப்படுகிறவர்கள் எப்போதும் இருப்பார்கள் (மாற்கு 14:7), கிறிஸ்தவர்கள் தங்களின் தொண்டு செயல்களில் குறிப்பிடத்தக்கவர்களாக இருக்க வேண்டும். சில எபிரெயர்கள் சட்டரீதியான பறிமுதல் அல்லது திருட்டு மூலம் தங்களது உடைமைகளை இழந்தார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் (எபி. 10:34). மற்றவர்களுடன் தங்கள் பொருளைப் பகிர்ந்து கொள்வதில் ஏற்படும் இழப்பை "மகிழ்ச்சியுடன்" ஏற்றுக் கொள்ளக்கூடிய மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது. பகிர்ந்து கொள்ளுகிற நடவடிக்கையில் நாம் ஒருவருடன் ஒருவரும் மற்றும் கிறிஸ்துவுடனும் பங்காளிகள் ஆகிறோம்.

## தற்போதைய நடத்துகிறவர்களின் கீழும் மற்றவர்களுக்காகச் செய்யும் வேண்டுதலிலும் நிலைத்திருங்கள் (13:17-19)

**17உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. 18எங்களுக்காக**

**வேண்டிக்கொள்ளுங்கள்; நாங்கள் நல்மனச்சாட்சியுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயித்திருக்கிறோம். [19]நான் அதிசீக்கிரமாய் உங்களிடத்தில் வரும்படிக்கு நீங்கள் இப்படி வேண்டிக்கொள்ளும்படி அதிகமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.**

இயேசு கிறிஸ்துவின் மாறாத தன்மையையும் கிறிஸ்தவக் கொள்கையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் விவாதித்த பின்பு, எழுத்தாளர் நடத்துகிறவர்கள் பற்றிய தலைப்பிற்குத் திரும்பினார். சபையில் உள்ள நடத்துகிறர்களிடம் நமக்கான பொறுப்புகள் மீது அவர் மீண்டும் கவனம் செலுத்தினார். பரலோக இலக்கை நோக்கி மற்றவர்களை வழிநடத்த வேண்டிய புனிதமான பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது, அதே சமயம், அவர்களது பணியில் அவர்களுக்கு உதவ வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது.

**வசனம் 17.** [சபையை] **நடத்துகிறவர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்** என்னும் கட்டளை நிகழ் காலத்தில் இருக்கிறது. இது சங்கீதம் 13:7 இல் குறிப்பிட்டுள்ளவர்கள் போல அல்லாமல் இந்த இடத்தில் "ஆத்தும-காப்பாளர்களாக" இருந்தவர்களுடன் தொடர்பு படுத்துகிறது. ஆத்துமாவைக் காக்கிறவர்கள் கண்டிப்பாக மூப்பர்களாக இருந்திருக்க வேண்டும். நல்ல மேய்ப்பர்களாக அவர்கள் ஆடுகளைப் பாதுகாக்க அயராது உழைக்க வேண்டும் (அப். 20:17, 28-30). இயல்பாகவே, முறையான சபைகூடுதலைக் கொண்டிருத்தல் தங்களது பொறுப்பில் உள்ள அங்கத்தினர்களின் ஆவிக்குரிய நிலைகளைப்பற்றி மூப்பர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

"மூப்பர்கள்" மற்றும் "மேய்ப்பர்கள்" என்னும் வார்த்தைகள் ஒரே அலுவலுக்குத் தொடர்புடையவைகள் என்னும் உண்மை, அப்போஸ்தலர் 20 இல் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பவுல் "மூப்பரை" வரவழைத்தார் (πρεσβύτεροι, *ப்ரிஸ்புடேரோய்*, வசனம் 17), பின்பு அவர்களைக் "கண்காணிகள்" (ἐπίσκοποι, *எபிஸ்கோபோய்*, வசனம் 28) என்று அழைத்தார். கவனித்துக் கொள்வதும், உணவூட்டுவதும் (ποιμαίνω, *போய்மெய்நொ*, வசனம் 28) அவர்களது மேய்க்கும் வேலையாகக் கொடுக்கப்பட்டுள்ளது, அதுவே "மேய்ப்பர்களின்" வேலையாகும். எனவே "மூப்பர்கள்" மற்றும் "கண்காணிகள்" ஆகிய வார்த்தைகள் "மேய்ப்பர்கள்" என்பதைக் குறிக்கும் லத்தீன் வார்த்தையான "பாஸ்டர்ஸ்" என்னும் அதே வார்த்தையாகும் இந்த வார்த்தை KJV-ல் எபேசியர் 4:11 இல் மட்டும் "பாஸ்டர்ஸ்" என்று வழங்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இவை அனைத்தும் விளக்கம் அளிக்கிற சொற்களாக ஒரே நிலைபாட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இது மீண்டும் 1 பேதுரு 5:1-4 இல் விளக்கப்பட்டுள்ளது, அங்கு பேதுரு "மூப்பர்கள்" (*ப்ரிஸ்புடேரோய்*;

வசனம் 1), “மந்தையை மேய்க்கும்படி” (*போய்மெய்நோ*; வசனம் 2) கேட்டுக் கொண்டார், மந்தைக்கு உணவூட்டி அல்லது மேய்ப்பருடைய அல்லது பாஸ்டருடைய வேலையைச் செய்து “கண்காணிக்க” (*எபிஸ்கோபோய்*; வசனம் 2) வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

சபையை நடத்துபவர்களின் பதவி மாதிரிகளைப் புதிய ஏற்பாடு தெளிவாக விளக்குகிறது. ஒவ்வொரு சபையிலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்று அப்போஸ்தலர் 14:23 கூறுகிறது. எபேசு சபையில் மூப்பர்கள் ஊழியம் செய்தார்கள் என்று அப்போஸ்தலர் 20:17, 28-30 தெரிவிக்கிறது. பிலிப்பி பட்டணத்துச் சபை “கண்காணிகளையும்” (“மூப்பர்கள்”) “உதவிக்காரர்களையும்” உடையதாய் இருந்தது (பிலி. 1:1). அவர்களுக்கான தகுதி 1 தீமோத்தேயு 3:1-12 மற்றும் தீத்து 1:5-9 இல் பட்டியலிடப்பட்டுள்ளது. பல்வேறு மதக் குழுக்கள் தங்களுடைய ஸ்தாபனத்தின் அமைப்பு முறையில் வேறுபடுகின்றன, ஆனால் வேதவாக்கியங்கள் கற்பிப்பதை நாம் பின்பற்ற வேண்டும். சுயாதீனமாக ஒவ்வொரு தனித்தனி சபையின் கண்காணிகளைப்போல் தலைமையத்துவத்திற்கான மாதிரியை நாம் பெற்றிருந்தால், எந்த ஒரு வேதவாக்கியங்களுக்கான அதிகார முறையையும் நாம் எப்படி நிறுவ முடியும்? பெரிய தீர்மானங்களை எடுப்பதில் அப்போஸ்தலர்களுடன் மூப்பர்கள் பங்கெடுத்தனர் (அப். 15:6, 22, 23). சபை மூப்பர்கள் யூதேயாவில் நிர்வாகிக்கப்படப் பணம் பெற்றனர் (அப். 11:27-30) சபைசாரா கிறிஸ்தவ அமைப்புகள் அல்ல. சபையின் வேலையை அதற்காகச் செய்கிற சபை சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களைப் பற்றிப் புதிய ஏற்பாடு அறிந்திருக்கவில்லை.

இந்த நிருபத்தின் பெறுநர்கள் தங்களுக்கான மூப்பர்களின் ஒரு பிரிவாக இருக்கவில்லை; தங்களை நடத்துகிறவர்களுக்கு “கீழ்ப்படிந்து” **அடங்குங்கள்** என்று அவர்கள் வலியுறுத்தப்பட்டார்கள். “கீழ்ப்படியுங்கள்” (πείθω, *பெய்தோ*) என்பது “இணங்குங்கள்” என்றும் “சமாதானமாயிருங்கள்” என்றும், அமைதியாக இருங்கள் என்றும் பொருள் தருகிறது. “கீழ்ப்படியுங்கள்” என்ற கட்டளையானது “சமர்ப்பியுங்கள்” என்றும், இனிமேலும் “எதிர்க்க வேண்டாம்” என்றும், “சரணடையுங்கள்” என்றும் பொருள் தருகிற “அடங்குங்கள்” (ὑπείκω, *ஹுபெய்கோ*), என்ற வார்த்தையால் வலுவூட்டப்படுகிறது. சில மதக் குழுக்கள் சபையாருக்குத் தலைமைத்துவத்தைக் கொடுத்திருந்தனர், இது புதிய ஏற்பாட்டின் கோட்பாடிலிருந்து பின்னோக்கியுள்ளது. நிச்சயமாக, மூப்பர்கள் தங்கள் பணிகளுக்கான கருத்து விவகாரங்களில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும் “அவர்கள் தேவனுடைய உபதேசங்களைப் போதிக்கும் பொழுதும், அவர்கள் இயேசுவை விசுவாசிக்கும்படி கேட்டுக் கொள்ளும் பொழுதும், அவர்களுடைய வழிகாட்டுதலுக்கு ஆதரவாக நமது மாறுபட்ட

கருத்துக்களை நாம் வழங்குகிறோம். வழக்கமான அடங்குதல் (நிகழ் கால ஏவல்) கட்டளையிடப்பட்ட ஒன்றாகும்."[46] "கீழ்ப்படிதல்" மற்றும் "அடங்குதல்" ஆகியவை புறக்கணிக்க முடியாத இரண்டு வார்த்தைகளாகும்.

மூப்பர்கள் என்பவர்கள் சபையார் மத்தியில் வாழ்ந்து, வேலை செய்கிறவர்களாவர், சில தொலைதூர அலுவலகங்களில் உள்ள அதிகாரத்துவ அதிகாரிகள் இல்லை. அவர்கள் விருந்தினர் பேச்சாளர்கள் போல ஈர்க்கத்தக்கவர்களாகவோ, சகோதரர்களைப் பிரம்மிக்க வைக்க வந்தவர்களாகவோ தெரியவில்லை, ஆனால் தேவையானதும், தாழ்மையானதுமான சேவையாக அவர்களுடைய பணிக்கு ஊதியம் வழங்கப்படும் (1 பேதுரு 5:1-5).

"ஆட்சியைக் கொண்டிருப்பவர்களைக்" குறிப்பிடும்போது, செப்துவஜிந்த் "நடத்துகிறவர்கள்" (ἡγέομαι, *ஹெகியோமை*) என்ற சொல்லை உபயோகப்படுத்துகிறது. இங்கு சில உத்தியோகப்பூர்வ அதிகாரம் சுட்டிக்காட்டப்படுகிறது, ஆனால் குறிப்பிட்ட அலுவலகம் எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. பாரம்பரிய பயன்பாட்டில் *எபிஸ்கோபோய்* ("கண்காணிகள்" அல்லது "ஆயர்கள்") என்பது அடிமைப்பட்ட நகரங்களிலுள்ள அடிமைகளிடம் சபை நிலை, மற்றும் வாணிக நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஏதென்ஸால் அனுப்பப்பட்ட அரசியல் அதிகாரிகளைக் குறிக்கும்.

சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் தங்கள் ஆவிக்குரிய கண்காணிகளுக்குக் கீழ்ப்பட்டிருக்கும் சபையில் இருக்க விருப்பமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். நடத்துகிறவர் ஒருவர் வழி தவறிச் சென்றால் ஒரு குருட்டு கீழ்ப்படிதலை தொடர வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. **காவல் காத்து** (ἀγρυπνέω, *அக்ருப்னிஒ*) என்ற சொல் எபிஸ்கோபெய்ன் என்பதற்கு மாறாக, "ஒரு சமூகத்தை மேற்பார்வையிடுவதற்கான ஒரு தொழில்நுட்ப வார்த்தை அல்ல, ஆனால் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை கருத்தில் கொண்டு, காவல் காக்கக் கூறும் அறிவுரைகளில் பொதுவாக உபயோகிக்கப்படுகிறது (மாற்கு 13:33; லூக். 21:36; ஒப்பிடுக எபே. 6:18)."[47] நித்தியத்தை மனதில் கொண்டு, "நடத்துகிறவர்கள்" **ஆத்துமாக்களுக்காக . . . விழித்திருக்க வேண்டும்**. நம் ஆத்துமாக்களைச் சரியான பாதையில் வைப்பதற்குச் சில வகையான வலுவூட்டல் தேவைப்படலாம் என்பதை இது குறிக்கிறது!

"காவல் காத்து" என்னும் வார்த்தை தூக்கத்தை இழக்க நேரிடும் அளவு விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.[48] தங்களது அக்கறை இந்த அளவை எட்டியுள்ள மூப்பர்கள், சகோதரர்களை வழிதவறி நடத்திச் செல்லக்கூடிய தவறான போதகர்களிடம் இருந்து சபையைக் காத்துக் கொள்ள பவுலின் புத்திமதிகளைப் பின்பற்றுகின்றனர் (காண்க அப். 20:28-31). அவர்கள்

“ஆத்துமா” விற்காக “காவல் காக்கின்றனர்,” (ψυχή, *ப்ஸுச்சே*) என்பது அந்த ஆத்துமா சம்பந்தப்பட்டவர்கள் என்று பொருளாகும்.

மூப்பர்களின் வேலையை மகிழ்ச்சியுடையதாகச் செய்வது ஒவ்வொரு சபையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அவர்கள் பிரதான மேய்ப்பரிடம் **கணக்கொப்புவிக்கும்போது** (1 பேதுரு 5:4), அவர்கள் ஒவ்வொருவரையும் குறித்து. “இந்தக் கிறிஸ்தவன் கடைசிபரியந்தம் நல்லவனும் விசுவாமுள்ளவனுமாக இருந்தான்” என்று கூற வேண்டுமென நாம் விரும்புகிறோம். “என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை” என்று யோவான் கூறுகிறார் (3 யோவான் 4). பவுலும் தெசலோனிக்கே பட்டணத்தில் மன மாற்றம் அடைந்தவர்களைக் குறித்து அதே விதமாக உணர்ந்தார் (1 தெச. 2:19, 20). விசுவாசத்தில் உள்ள என்னுடைய பிள்ளைகள் எனக்கு “சந்தோஷம் அடையும் காரணத்தைக்” கொடுத்தார்கள் என்று அவர் கூறினார் (பிலி. 2:16).

நம்மை நடத்துகிறவர்கள் யாரைக் குறித்தும், “பிதாவே, நாங்கள் வருந்துகிறோம், அவன் விசுவாசம் வைக்க நாங்கள் முயற்சி செய்தோம்; ஆனால் அவன் விலகிச் சென்றான், எங்களுடைய எந்த முயற்சிகளாலும் அவனை மீட்டெடுக்க முடியவில்லை.”[49] என்று கூற நாம் விரும்பவில்லை. விசுவாசமில்லாத கிறிஸ்தவன் **பயனற்றவன்** என்று கூறுவது குறைமதிப்பீட்டுரையாக இருக்கலாம் (கவனிக்க எபி. 10:31; 12:29). பயனற்றவனும் விசுவாசமற்றவனுமாகிய ஒருவன் நடத்துகிறவர்களுக்கு வருத்தத்தையும், சகோதரர்களுக்குச் சாத்தியமான ஆபத்தையும், தன்மீது நித்திய இழப்பையும் கொண்டு வருகிறான்.

**வசனங்கள் 18, 19.** ஆசிரியர் **நமக்கு** என்றும் **நாம்** என்றும் வசனங்கள் 18 இலும் 21 இலும் கூறுகிறார். அது உண்மையாகவே பன்மையாக இருந்தால் (மேலும் தலையங்க “நாம்” இல்லை), இந்தப் பிரபந்தத்தை எழுதுவதில் மற்றவர்களும் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை அது காண்பிக்கிறது. வசனம் 19 மற்றும் 22 இல் நாம் மீண்டும் தன்மை ஒருமையைப் பார்க்கிறோம். எபிரெயரின் முதலாவது வாசகர்கள் ஆசிரியரை நன்கு அறிந்திருந்தார்கள் என்பது வெளிப்படையானது. அவர் வழங்க வேண்டும் என்று தேவன் விரும்பிய செய்தியை எழுதிய பின்பு, ஆசிரியர் தெளிவான நல்மனச்சாட்சியைக் கொண்டிருந்தார். எதிர்வரும் ஆபத்துகளைப்பற்றி அவரது வாசகர்களை மீண்டும் மீண்டும் எச்சரித்தார், ஆனால் அவர்களுடைய உதவியும் அவருக்குத் தேவைப்பட்டது.

வாசகர்கள் இரண்டு விஷயங்களைக் குறித்து அழைக்கப்பட்டனர். முதலாவது, ஆசிரியர் தனக்காக **வேண்டிக் கொள்ளும்படி** கேட்டுக் கொண்டார் (அல்லது “வேண்டிக் கொள்ளுங்கள்” காலம்

சுட்டிக்காட்டுவது போல; வசனம் 18). **அதிகமாய்** (வசனம் 19) என்பது அவர்கள் அவ்வாறு செய்து கொண்டிருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கிறது. இரண்டாவதாக, அவர்களுடனான அவருடைய நேர்மையான நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக இருக்கிற அவருடைய **நல்மனச்சாட்சியை** அவர்கள் கருத்தில் கொள்ளும்படி வலியுறுத்தினார் (காண்க ரோமர் 9:1; 2 கொரி. 1:12; 6:3). அவர் அவர்களிடம் **எல்லாக் காரியங்களிலும் யோக்கியமாய் நடந்தபடியினால்**, அவர்களுடைய ஜெபங்களுக்குத் தகுதியானவர். அவர் தனது கடமையைச் செய்திருந்தார் என்று தன்னுடைய இருதயத்தில் உணர்ந்தார். பவுல் அவருடைய நிருபங்களின் முடிவில் ஜெபம் செய்யும்படி அடிக்கடி கேட்டுக் கொண்டார் (ரோமர் 15:30; எபே. 6:18, 19; கொலோ. 4:3; 1 தெச. 5:25; 2 தெச. 3:1). நிச்சயமாக இது முதல் நூற்றாண்டு பரிசுத்தவான்களின் இயல்பான வேண்டுகோளாக இருந்திருக்கும்.

ஆசிரியர் எபிரெய கிறிஸ்தவர்களிடம் பாசாங்குத்தனம் செய்திருக்கவில்லை, ஏனென்றால், வரவிருக்கும் அபாயங்களை அவர் தெளிவாக வெளிப்படுத்தினார். யூத மதத்திற்கும் அதன் பலி செலுத்தும் முறைமைகளுக்கும் வரவிருக்கிற முடிவு பற்றியும் அவர் அவர்களிடம் கூறினார். பேச்சாளரின் நேர்மையைக் குறித்துச் சில சந்தேகங்கள் அவர்கள் மனதில் இருந்திருக்கலாம், அல்லது இந்த நியாயநிரூபணம் தேவைப்பட்டிருக்காது.

எழுத்தாளர் இந்தச் சகோதரர்களிடமும் அவர்களுடைய ஜெபங்களிலும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். அவர் அவர்களிடம் **மீண்டும் வருவார்** என்று நம்பினார் (வசனம் 19). அவர் சிறைச்சாலையில் இருந்தாரா? அவர்களைப் பார்க்க வருவதில் இருந்து அவர் சாத்தானால் தடை பண்ணப்பட்டிருந்தாரா (1 தெச. 2:18)? ஒரு கால அளவு சிறைதண்டனை என்பது நிகழ்ந்திருக்கக் கூடிய விளக்கமாகத் தெரிகிறது. இஸ்ரவேலின் ஒவ்வொரு குழந்தைக்கும், எருசலேம் “தாயகம்” ஆகும், அவர்களுடைய கனவுகளின் தேசம். பவுல் தனது இரண்டாவது சிறைவாசத்தின் போது, ரோம் நகரத்தில் இருந்து உயிரோடு செல்ல முடியாது என்பதை அறிந்திருப்பதற்கு முன்பு அத்தகைய கருத்துகளைக் கூறியிருக்கலாம் (2 தீமோ. 4:6-8 இல் பவுல் சுட்டிக் காட்டியுள்ளது போல). அவர் எருசலேமில் கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்தார், அந்தப் பெரிய நகரம் அவருக்கு இரண்டாவது தாயகமாகும்.

நிச்சயமாகப் புதிய ஏற்பாடு பரிசுத்தவான்கள் மத்தியில் ஜெப வேண்டுகோள் ஒரு பொதுவான நிகழ்வாக இருந்தது, ஆனால் இது பவுலின் மிக ஒழுங்கான பழக்கமாகும்.[50] பிலேமோனுடைய ஜெபங்களினாலே சகோதரர்களை அவர் சீக்கிரத்தில் காணமுடியும் என்று நம்பினார் (பிலே. 22). இதற்குத் தேவனுடைய திவ்விய செயல்பாடு தேவை என்றாலும், வெளிப்படையாக, அது எந்த

அதிசயத்தையும் கொண்டிருக்கவில்லை. அப்போஸ்தலர் 12 இல் பேதுருவின் அற்புதமான விடுதலையையும் அப்போஸ்தலர் 5:18-21 இல் அப்போஸ்தலர்களின் விடுதலையையும் எபிரெயர் நிருபத்தின் எழுத்தாளர் அறிந்திருக்க வேண்டும், ஆனால் அவருடைய அல்லது அவருடைய வாசகர்களின் விண்ணப்பங்களுக்கு அத்தகைய பதிலை அவர் எதிர்பார்த்தார் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. அவர் சிறையில் அடைக்கப்படாமல், தீமோத்தேயு விடுவிக்கப்பட்டான் (வசனம் 23) என்று அறிந்திருந்தால், அவர்களில் இருவர் சேர்ந்து எபிரெயர்களைச் சந்திக்கலாம் என்று நம்பியிருக்கலாம். அவர் நேரடியாக அந்த நிருபத்தை வழங்கியிருந்தால் அநேக காரியங்களை விளக்க முடியும்.

## தேவனிடமும் சகோதரரிடமும் கிட்டிச்சேருங்கள் (13:20-25)

**[20]நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன், [21]இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென். [22]சகோதரரே, நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்தப் புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். [23]சகோதரனாகிய தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டானென்று அறிவீர்களாக; அவன் சீக்கிரமாய் வந்தால், அவனுடனேகூட நான் வந்து, உங்களைக் காண்பேன். [24]உங்களை நடத்துகிறவர்களையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள். இத்தாலியா தேசத்தார் யாவரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். [25]கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.**

இந்த நிருபத்தின் ஆசிரியர் தனது இறுதி வார்த்தைகளாக வழங்கியவைகள் எவை? அவர் பழைய நியாயப்பிரமாணம் மற்றும் புதிய நடைமுறை வாழ்க்கைப் பிரமாணம் ஆகிய இவைகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டை, ஒரு ஆழமான மற்றும் முழுமையான ஆய்வு மூலம் கொடுத்துள்ளார். இப்போது அவர்களுக்குப் பிரியாவிடை சொல்லும் நேரம் வந்து விட்டது. அவர் புகழ்ச்சி, புத்திமதி மற்றும் சந்தோஷத்துடன் முடிக்கின்றார்.

**வசனம் 20.** தம்மை அவர்களது ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்ட நிருபத்தின் ஆசிரியர், அடுத்தபடியாக அவர்களுக்காக விண்ணப்பம் பண்ணினார். **சமாதானத்தின் தேவன்**

மட்டுமே மெய்ச் சமாதானத்தை அருள முடியும். "சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடக்கூடிய" வல்லமையுடைய தேவனாய் அவர் இருக்கிறார் (ரோமர் 16:20). "சமாதானத்தின் தேவன்" என்ற வார்த்தை, புதிய ஏற்பாட்டில் பவுலினால் ஆறு தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது.[51] தேவன் இல்லாத இடத்தில் சமாதானம் இருக்காது. கிறிஸ்து சிலுவையில் மரித்ததினால் சமாதானம் நம்முடையதாய் இருக்கிறது (எபே. 2:14-17). இது இராஜ்யம்/சபையில் யூதர்கள் மற்றும் புறஜாதிகளிடையே சமாதானத்தைக் கொண்டுவரக்கூடியதாக இருக்கிறது. தேவனால் மட்டுமே சபைக்கு இத்தகைய சமாதானத்தை இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் வழங்க முடியும்.

எபிரெயர் நிருபத்தைப் பெற்றுக்கொண்ட சபைகளில் பிரிவினைகள் இருந்திருக்க வேண்டும். இதுவரை நிகழ்ந்திராத விசுவாச துரோகம், அவர்களுடைய ஆத்துமாக்களின் இரட்சிப்புடன் தொடர்ந்து வரும் சமாதானத்தைத் தருவதற்காகக் கிறிஸ்து வந்தார் என்ற பிரதான காரியத்தையே அழித்திருக்க வேண்டும். எபிரெய கிறிஸ்தவர்களுக்கு அவர்களுக்குள்ளும் மற்றும் தேவனோடும் சமாதானமாக இருப்பது அவசியமானதாய் இருந்தது. இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்திலிருந்தே, எருசலேமில் சமாதானம் இல்லை. இதற்கு மாறாக, தேவனுடைய குணாதிசயத்தின் பிரதான சாராம்சமே சமாதானமாய் இருக்கிறது.

இயேசுவே **பெரிய மேய்ப்பராக**, அதாவது நம்முடைய ஆத்துமாவின் ஒரே ஒரு மனித "போதகராக" ("மேய்ப்பர்") இருக்கிறார்.[52] இந்த மேற்கோளில், சாந்தம் மற்றும் ஒரு இரக்கம் இருப்பதை ஒவ்வொரு இடத்திலும், நேரத்திலும் காணலாம் என்பதை மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது. "இயேசு, அன்பான மேய்ப்பன்" போன்ற கீர்த்தனைகள், நம் ஆத்துமாவின்மீது கரிசனை உள்ளவருக்கு ஆராதிப்பவர்களிடமிருந்து ஒரு அன்பான பிரதிபலிப்பை ஊக்குவிக்கின்றன.

இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதை அனுமானித்து, திரும்பத் திரும்ப மேற்கோள் காட்டப்பட்டிருந்தாலும், எபிரெய நிருபத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் குறிப்பானது 20-ம் வசனத்தில் மட்டுமே அடங்கியிருக்கிறது. எனினும், வசனங்கள் 6:2 மற்றும் 11:35 களில் பயன்படுத்தப்பட்டுள்ள "உயிர்த்தெழுதல்" (ἀνάστασις, *அனஸ்தாசிஸ்*) என்ற வார்த்தையானது, இந்த வசனத்தில் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக, **எடுத்துக் கொள்ளப்பட்டார்** அல்லது "வழிநடத்தப்பட்டார்" (ἀνάγω, *அனஹோ*) என்று பொருள்படும்படியான வார்த்தையை நாம் காணலாம். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், மற்றும் பின்னர் **மரித்தோரிலிருந்து** பரலோகத்திற்கு "எடுத்துக் கொள்ளப்பட்டார்." ஏனென்றால், இயேசு தம் இரத்தத்தைச்

சிந்தியதால் இது நடந்தேறியது, மற்றும் இதன் மூலம் புதிய உடன்படிக்கைக்கு உதவியாய் இருந்தது. நிறைவேற்றப்படுதலைக் கொண்டு, இந்த பரிசுத்தவான்களை "ஆயத்தப்படுத்துவது" (வசனம் 21-ஐ பார்க்கவும்) அல்லது அதாவது அவர்களை "முழுமையானவர்களாக்குவது" எனும் பொருளைத் தரும்படியாக "குறைபாடற்றவர்களாக்குவது" (ASV) என்பது அவசியமாய் இருந்தது. தேவனுடைய உதவியால், தேவையான அனைத்தையும் அவர்களால் செய்ய முடியும்.

இயேசுவே **ஆடுகளின்** "பெரிய மேய்ப்பராயும்," மற்றும் "பிரதான மேய்ப்பராகவும்கூட" இருக்கிறார் (1 பேதுரு 5:4). பழைய ஏற்பாட்டில், தேவனுடைய ஜனங்களின் "மேய்ப்பர்" என்பது பொதுவாகத் தேவனை அல்லது மோசேயைக் குறிக்கிறது (சங். 77:20; 95:7 பார்க்க). இந்த "பெரிய மேய்ப்பருடன்" எந்த ஒரு தெய்வத்தையும் ஒப்பிட முடியாது. பிரதான மேய்ப்பரின் கீழ், மூப்பர்கள் "மேய்ப்பர்களாக" பணியாற்றினார்கள் என்று நாம் பார்த்தோம் (எபி. 13:17; 1 பேதுரு 5:1, 4).

இந்தத் துறவறவியல், மீண்டும் **நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தின்** சிந்தனையைக் கொண்டுள்ளது. அது எபிரெய மொழியில் சொல்லப்பட்ட எல்லாவற்றின் சுருக்கமான, குறைந்தபட்சம் அதன் மிகச்சிறந்த கருத்தின் திரட்டாக இருக்க வேண்டும் என்பதாகக் காணப்படுகிறது. "நித்தியத்திற்கான" இரத்தத்தின் வல்லமையானது, தேவன் விரும்பும் காரியங்களைச் செய்வதற்கு நம்மை முற்றிலும் தகுதிப்படுத்துகிறது. அதன் தற்காலிக இயல்புடன், பழைய உடன்படிக்கையின் மூலம் இதை அடைய முடியாது. மெய்யாகவே இயேசுவின் இரத்தத்தால் ஆரம்பிக்கப்பட்ட உடன்படிக்கை (மத். 26:28), எல்லாக் காலத்திற்கும், அல்லது "நித்தியத்திற்கும்" உரியதாய் இருக்கிறது.

**வசனம் 21. கர்த்தருடைய பார்வையில் மகிழ்வூட்டுகிறதாக நம்மிடத்தில் கிரியை செய்து, ஒவ்வொரு நல்ல காரியத்திலும் அவருடைய சித்தத்தைச் செய்ய [நம்மை] தகுதிப்படுத்துவதே** அவருடைய சித்தமாயிருக்கிறது. நாம் கீழ்ப்படியும்போது, எதைச் செய்வதற்கு நாம் தகுதிப்படுத்தப்பட்டுள்ளோமோ, அதைச் செய்யத் தேவன் நம்மில் கிரியை செய்கிறார் (பிலி. 2:12, 13 பார்க்கவும்). "ஒவ்வொரு நற்கிரியையுஞ் செய்யத்" தகுதியுள்ளவர்களாக நாம் இருக்கும்படி, வேதவாக்கியங்களெல்லாம் நமக்கு அருளப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது (2 தீமோ. 3:16, 17). நாம் எதைச்செய்தாலும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக, நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும். சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் இந்த மகிமை வழங்கப்படுகிறது (எபே. 3:21). "தேவனின் கிரியையானது மனிதனின் வேலைகளைச் சாத்தியமாக்குகிறது,"[54]

ஆனால் தேவனுடைய கிருபைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் மனிதனின் மறு மொழியும் அதற்கு அவசியமாய் இருக்கிறது. நமக்குத் தேவையான "நன்மையான" சகலத்தையும் நம்முடைய தேவன் நமக்கு அளிக்கிறார். தீய நோக்கத்துடன் பொல்லாத மக்களால் உருவாகும் சூழ்நிலைகளையும்கூட மேற்கொள்ள, அவர் நமக்கு "நன்மை" செய்து உதவுகிறார் (ரோமர் 8:28).

20 மற்றும் 21 ம் வசனங்களில் உள்ள ஜெபமானது, தேவனால் நிறைவேற்றப்படவும், மற்றும் நம் மூலமாகத் தேவையான அனைத்தையும் இயேசு **கிறிஸ்துவின் மூலம்** அவரை மகிமைப்படுத்தும்படியாக விசுவாசிகளுக்கு இடங்கொடுக்கிறது என்பதாய் இருக்கிறது. ஆகையால், பிதாவானவரைப் போலவே குமாரனும் மகிமைப்பட வேண்டும் (யோவான் 17:5). இந்த இறுதி **மகிமையைக்** கொடுப்பது, கிறிஸ்துவைக் குறிப்பிடும் ஒரு துறவறவியலை உருவாக்குகிறது. இந்த மகிமையானது, "சபையிலும், மற்றும் இயேசு கிறிஸ்துவிலும்" தேவனுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதாக எபேசியர் 3:21 ல் இருக்கிறது. எபிரெயர் நிருபத்தில் இங்கு காட்டப்பட்டுள்ளபடி, கிறிஸ்துவிற்கு மகிமையைக் கொடுக்காதபடி இது நம்மைத் தடுக்காது. **ஆமென்** என்பது அசாதாரணமாய் இருக்கிறது, ஆனால் இது கொடுக்கப்பட்ட சத்தியங்களுக்கு முக்கியத்துவத்தைச் சேர்க்கும் ஆவியின் வழியாய் இருக்கலாம்.[55]

**வசனம் 22.** யூத மதத்தைப் பற்றிய வலுவான அறிக்கைகள் இந்த நிருபத்தில் கொடுக்கப்பட்டுள்ளன, ஆகவே வாசகர்கள் இந்த **புத்திமதியான வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளும்படி** வேண்டிக்கொள்ளப்பட்டனர். அவர்கள் வெறுமனே அதன் பொருளினை ஏற்றுக் கொள்ளாமல், ஒவ்வொரு வார்த்தையையும் கவனிக்க வேண்டும் என்பதாக இது பொருள்படுகிறது. "புத்திமதி" என்ற வார்த்தையானது, ஆறுதல் (2 கொரி. 1:3-7) மற்றும் அறிவுரை ("ஊக்குவித்தல்," அப். 15:31) ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. "புத்திமதியான வார்த்தைகள்" (παράκλησις, *பராக்கிலேஸிஸ்*) என்ற சொற்றொடர், இந்த நிருபத்தை நீண்ட ஒரு மதபோதனையைப்போல, அதாவது மதபோதனையின் ஒரு வகையைப் போல (அப். 13:15) சித்தரிக்கிறது. பொது இடங்களில் (1 தெச. 2:3) அல்லது ஒரு சபையில் (ரோமர் 12:8; 1 தீமோ. 4:13) பிரசங்கிக்க அதே சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிருபம் முழுவதும் உள்ள புத்திமதியான வார்த்தைகள் இந்த யோசனையை ஆதரிக்கிறது (பார்க்க 2:1-3; 3:12-14; 4:11, 14; 5:11-6:8; 10:19-25; 13:1-17).

இந்த "நிருபம்" (**எழுதப்பட்ட** செய்தி, ἐπιστέλλω, *எபிஸ்டெல்லோ*), அல்லது கடிதம், ஒரு பிரசங்கத்தின் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது. எபிரெயர் நிருபத்தின் முழு உரையையும் ஒரு மணிநேரத்திற்குள் சத்தமாக வாசிக்க முடியும் என்றாலும்,[57] ஒரு கடிதம்

என்று பார்க்கும்போது ஓரளவு நீண்ட கடிதமாக உள்ளது.[56] இது முதல் நூற்றாண்டில் நடந்த நீண்ட பிரசங்கத்தின் சில காரியங்களைப்பற்றி நமக்குச் சொல்லலாம். அப்போஸ்தலர் 20-ல் உள்ள நள்ளிரவு வரை நீடித்த பவுலின் பாடமானது, சாத்தியமான ஒரு விதிவிலக்காக இருந்தது. துரோவாவில் உள்ள சகோதரருக்கு அவனுடைய கடைசிப் பிரசங்கமாக அது இருக்கும் என்று அவன் நம்பியதால், அது ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக இருந்தது.

**வசனம் 23.** பவுலின் கடிதங்களில் ***தீமோத்தேயு***[வின்] சிறைவாசத்தைப்பற்றி நமக்குக் குறிப்பிடப்படவில்லை; ஆனால், அப்போஸ்தலன் வருகைக்காக மிகுந்த விசுவாசம் வைத்திருந்த ஒருவனை, சிறைச்சாலையில் அவன் பார்க்கும் முயற்சியில் தனது சொந்த பாதுகாப்பில் பாதிக்கப்படும் ஆபத்து இருந்தது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. **விடுவிக்கப்பட்டான்** (ἀπολύω, *அப்போலுயோ*) என்ற வார்த்தை, "ஒரு தூதுக்குழுவிலிருந்து புறப்படக் கொடுக்கப்பட்ட விடுப்பு" போல "விட்டு விடு" அல்லது ஒருவனுக்கு "மன்னிப்பு" தருவது போன்றும்கூடப் பொருள்படலாம் (மத். 18:27; லூக். 6:37 பார்க்கவும்). எனினும், தீமோத்தேயு அறியப்படாத சிறைவாசத்தில் இருந்து விடுவிக்கப்பட்டான் என்ற கருத்து முற்றிலும் சாத்தியமானது.[58] பவுலுடனான தொடர்பு "தீமோத்தேயுவை" தானாகவே புதிய "பிரிவின்" ஒரு உறுப்பினராகக் கண்டிருக்க வேண்டும்; ஆனால், ரோம குடியுரிமை இல்லாததால் பவுலின் உரிமைகள் அவனுக்கு இருந்திருக்காது. ரோம அதிகாரிகள் ரோமுக்கு அவன் அச்சுறுத்தலாக இல்லையென்று அவனை விடுவிப்பதாகத் தீர்மானித்ததற்கு முன்னர், எவ்வளவு காலம் சிறையில் இந்தத் தைரியமில்லாத இளைஞன் (2 தீமோ. 1:7-ஐ பார்க்கவும்) கழித்தான்? நிச்சயமாக, அவன் "மாரிகாலத்துக்குமுன் வரும்படி எல்லா முயற்சிகளையும் செய்து" பவுலின் வேண்டுகோளுக்குக் கீழ்ப்படிந்தான் (2 தீமோ. 4:21). இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தனிப்பட்ட தகவல்கள், எபிரெயர் நிருபத்தின் ஆசிரியராக பவுலின் கோட்பாடுகளை வாதிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. பவுலைவிட யாரும் தீமோத்தேயுவுக்கு நெருங்கினவனாக இல்லை. பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில், இந்த முழுமையான யூதரல்லாத சகோதரர் மீது குவிக்கப்பட்ட விரிவான பாராட்டு வகையினை நிறுத்துவதற்கு, ஒரு யூத சபையைக் கொண்டு, நிருபத்தின் ஆசிரியரைத் தாமதமின்றிக் கேட்கும் (2:19-24). தீமோத்தேயுவே இந்த முழு நிருபத்திலும் பெயர் குறிப்பிடப்படப்பட்டுள்ள ஒரே கிறிஸ்தவனாய் இருக்கிறான்.

**வசனம் 24.** இந்த நிருபமானது, சபைகள் அல்லது சபையின் மூப்பர்களிடம் உரையாற்றப்படாமல், அதன் உறுப்பினர்களின் ஒரு பிரிவினர்களிடம் மட்டுமே உரையாற்றப்பட்டது. இந்த நிருபத்தின் ஆசிரியர், யூத மதப் பாரம்பரியத்திற்குள் அவர்களை மீண்டும் இழுத்துச்

செல்வதைத் தடுக்க முயற்சி செய்துள்ளான். இந்த சகோதரர், நிருபத்தின் ஆசிரியரின் அன்பான விசாரிப்புகளுடன், **[தங்கள்] எல்லா தலைவர்களையும் வாழ்த்தினார்**. இந்தக் குழுவில் சபைக்குள்ளே இருந்த முந்தைய யூத ஆசாரியர்கள் (அப். 6:7) இருந்திருந்தால், பொதுவான நாட்டுப்புற மக்களாக இருந்த மூப்பர்களை மதிப்பதில் அவர்களுக்குச் சிரமம் இருக்கலாம். அவர்கள் தங்கள் "தலைவர்களுக்கு" (ἡγέομαι, *ஹெஜியோமாய்*) "ஒப்புக்கொடுத்து" அவர்களுடைய "சட்டங்களை" (13:17; ASV) ஏற்றுக் கொள்வது அவசியமாய் இருந்தது. *ஹெஜியோமாய்* என்பது, வழிநடத்துதல் அல்லது கட்டளையின் வல்லமையைக் குறிக்கிறது. அத்தகைய அதிகாரத்திற்குச் சமர்ப்பித்தல், பிரபுத்துவ ஆசார்யர்களுக்குத் தாழ்ந்து போவதாகத் தோன்றியிருக்கலாம். அவர்கள் சில "தலைவர்களையும்," மற்றும் பிற நபர்களையும் "வாழ்த்த" (ἀσπάζομαι, *அஸ்பஷோமை*) வேண்டும். இது சபை தலைவர்களை "தழுவுவதையும்" கூட உள்ளடக்கி இருக்கலாம். சமர்ப்பிப்பதும், மற்றும் சபையில் கண்காணிகளின் தலைமையைப் பின்பற்றுவதும், மனத்தாழ்மையின் ஒரு ஆவியையும், மற்றும் கிறிஸ்துவிடம் செல்லும் மெய்யான மனந்திரும்புதலையும் வெளிப்படுத்தும்.

ரோமர் 16:16-ல் பவுல் கட்டளையிட்டபடி, **பரிசுத்தவான்களாகிய எல்லா** கிறிஸ்தவர்களுக்கும் அவர்கள் வாழ்த்துதல் தெரிவிக்க வேண்டியிருந்தது. அத்தகைய வாழ்த்துதல்களை அவன் "கிறிஸ்துவின் அனைத்து சபைகளிலிருந்தும்" அனுப்பினான். நீண்ட காலத்திற்கு முபு மரித்திருந்த தகுதியுள்ளவர்களாக இல்லாமல், வாழ்ந்து கொண்டிருந்த பரிசுத்தவான்கள் என்பது தெளிவாக உள்ளது. கிறிஸ்தவர்கள் பரிசுத்தவான்களுக்கு அல்லது அவர்கள் மூலம் ஜெபிப்பதில்லை.

**இத்தாலி நாட்டிலிருந்து வந்தவர்கள்** என்பது, "இத்தாலியில் உள்ளவர்கள்" அல்லது நிருபத்தின் ஆசிரியருடன் வேறு ஒரு இடத்தில் இருந்த "இத்தாலி நாட்டை" சேர்ந்தவர்கள் என்று பொருள்படலாம். இந்தச் சொற்றொடரிலிருந்து, நிருபத்தின் ஆசிரியரின் இடத்தை உறுதியுடன் தீர்மானிக்க முடியாது; எனவே, பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் அசல் போன்றே பல பொருள்படும்படியாகத் தெளிவற்றதாக இருக்கிறது.[59] இது வெளிநாட்டினருக்கு வாழ்த்துக்களை அனுப்பின தங்கள் நாட்டில் உள்ள இத்தாலிய கிறிஸ்தவர்களுக்கு ஒரு பொருத்தமான பெயராக இருக்கும். கடிதத்தின் பெறுநர்களுக்கு மிகவும் தொலைவில் இருந்த இத்தாலிய சகோதரரிடமிருந்து பெற்ற வாழ்த்துக்களைப் பெரும்பாலும் இந்த வெளிப்பாடு குறிப்பிடுகின்றன; இரு குழுக்களும் ஒருவரையொருவர் ஒருபோதும் சந்தித்திருக்கமாட்டார்கள்.

**வசனம் 25. கிருபைக்கான** வார்த்தை (χάρις, *ஷரிஸ்*) ஆகும். இது கிறிஸ்தவரின் கடிதத்தில் ஒரு பொதுவான ஆசீர்வாதமாக இருந்தது,

மற்றும் இது பவுலினால் பயன்படுத்தப்படும் பொதுவான வாழ்த்துக்களாய் இருந்தது.[60] அந்தக் கடிதத்தைப் பெறும் நபர் மீது ஒரு தெய்வீக ஆசீர்வாதத்தை அளிப்பதற்கான விருப்பம் என்பதை இது குறிக்கிறது. சாதாரணமான ஒரு வழக்கமான வாழ்த்தை விட, ஆசீர்வாதம் பெரும்பாலும் அப்போஸ்தலர்களின் அதிகாரத்துடன் வந்தது. பெரும்பாலும் ஒவ்வொருவக்கும் தேவைப்படுவது தேவனின் கிருபையாய் இருக்கிறது. யூத கிறிஸ்தவர்கள் எதிர் கொண்ட பெரும் வேதனையினால், இந்த ஆசீர்வாதம் மிகச்சிறப்பாக அவசியமானதாய் இருந்தது.

## பயன்பாடு

### நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு

### அன்புகாட்டும் பயிற்சி (13:1)

"என் சகோதரர் யார்?" என்பது ஒரு ஒழுக்கமற்ற, சட்டவிரோதமான அல்லது தவறான கேள்வி அல்ல. "எனக்குப் பிறன் யார்?" என்று வினவின நியாயசாஸ்திரியின் கேள்விக்கு இயேசு பதிலளித்தார் (லூக். 10:29-37), ஆனால் அவர் அதைவிட அதிகமாகப் பதில் அளித்தார். அவன் கேட்டிருக்க வேண்டிய கேள்வியான "நான் யாருக்கு *சகோதரனாக* இருக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதிலாகக் காட்டினார், "எல்லா மனித இனமும், நீங்கள் இழிவாகக் கருதுகின்ற அந்தச் சமாரியர்களும்கூட" என்பதே பதிலாக இருந்தது. சகோதரர் அன்பு, பிறனுடைய அன்பிற்கும் அப்பாற்பட்டது; கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்கள் ஒவ்வொருவரும் சகல சகோதரரிடமும் காட்ட வேண்டிய ஒரு விசேஷித்த அன்பாக இது இருக்கிறது.

நாம் சரியானதொரு அன்பைக் கொண்டிருந்தால், அவர்கள் தங்களை நிரூபிக்கவில்லை என்றால் அன்றி, நாம் கர்த்தரிடம் விசுவாசமாய் இருப்பதைப்போல எல்லா சகோதர சகோதரிகளையும் பார்ப்போம். ஒரு விசுவாசமுள்ள சகோதரனாக இன்னொருவனை எண்ணுவதை நிறுத்தும்போது, நாம் கவனமாகவும், மற்றும் ஆழ்ந்து ஆராய்ந்தும் சிந்திக்க வேண்டும். "அவன் பலவீனமான சகோதரனா?" என்று நாம் கேட்க வேண்டும். அப்படியிருந்தால் அவனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கும், மற்றும் அவன் தடுமாற வழி உண்டாகாதபடிக்கும், இதனால் அவன் விசுவாசத்திலிருந்து விலகிச் செல்ல இடம் கொடுப்பதால், நாம் அவனை மிகவும் கவனமாக நடத்த வேண்டும் (1 கொரி. 8:12, 13).

கிறிஸ்துவின் சபையைப் பிரிப்பதற்கான கருத்துக்களை ஊக்குவிக்கும் ஒருவனை விட்டு விலகிச் செல்ல வேண்டும், என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன (தீத்து 3:10, 11; 2 தெச. 3:6). தீத்து 3:10 ல் உள்ள "வேதப்புரட்டன்" என்ற வார்த்தை (αἱρετίκος,

*ஹரிட்டிகோஸ்*, “வேதப்புரட்டன்”), பிளவுகள் அல்லது பிரிவினைகளை ஏற்படுத்தும் ஒருவனைக் குறிக்கிறது. ஒருவன் மற்றவர்களிடம் தனது கருத்தை வலியுறுத்துவது, சகோதர ஐக்கியம் முறிந்து போவதற்கு வழிவகுக்கலாம். இத்தகைய ஒரு நபர், சகோதர அன்பை நடைமுறைப்படுத்தும் ஒரு சபையில், அதைக் கடைப்பிடிக்க விரும்பினால், அதைச் சகித்து கொள்ள மாட்டார்கள்.

**கைதிகள் சம்மந்தப்பட்டது (13:3)**

கைதிகளைச் சந்திப்பது ஒரு மகிழ்ச்சியான வேலை அல்ல, ஆனால் அது கர்த்தரால் பாராட்டப்படுகிறது. நாங்கள் மற்றவர்களைச் சேவிப்பது போல, நாங்கள் கிறிஸ்துவிற்கு ஊழியம் செய்து வருகிறோம் (மத். 25:36, 43). சிலர், “நியாயப்பிரமாணத்தை மீறியவர்களுடன் தொடர்பு கொள்ளாமலேயே தங்களுக்குப் போதுமான பிரச்சனைகள் உள்ளன” என்று நினைக்கலாம். நம்முடைய சொந்த பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்று, மற்றவர்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்துவது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த பத்து வருடங்களில், நான் ஊழியம் செய்த சபையானது அருகிலுள்ள சிறைகளில் உள்ள ஆயிரம் பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறது. நகரத்திற்குச் சற்று வெளியே உள்ள ஒரு பெரிய சிறையில், இந்தச் சுவிசேஷ இயக்கம் சராசரியாக வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நபர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது, மற்றும் ஒரே ஞாயிறு அன்று பன்னிரண்டு நபர்கள் ஞானஸ்நானம் பெற்றதைக் கேட்பதற்கு, நம்பமுடியாத ஒன்றாக அது இருக்கவில்லை. இந்த சகோதரரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள நான் முயற்சி செய்கிறேன்; ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆராதனைக்குப் பிறகு நான் வெளியேற முடியும், ஆனால் அவர்கள் பின்னால் இருக்க வேண்டும். “அவர்களுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளது போல் உள்ள கைதிகளை நினைவில் வைத்துக்கொள்வது எவ்வளவு கடினமாய் இருக்கிறது!”

**விவாகம் தேவனால் நியமிக்கப்பட்டது (13:4)**

தேவன்தாமே கல்யாணத்தை நியமித்தார் (ஆதி. 2:20-24). தேவனுடைய படைப்பிலே, மனிதன் தனியாய் இருப்பது மட்டுமே “நல்லதல்ல” என்று தேவனால் கருதப்பட்டான் (ஆதி. 2:18), மற்றும் அவர் சரியான உதவியாளரை வடிவமைத்தார். “உதவி செய்யும் நண்பர்” (עֵזֶר, *ஈசெர்*) என்ற வெளிப்பாடு, ஒரு துணைவருக்கு மேலானவர் என்பதைக் குறிக்கிறது; அது மனிதனுக்கு உள்ள குறைபாடுகளைத் தீர்த்து வைப்பவளாக மனுஷி இருப்பதாக அது கூறுகிறது. தேவன் ஆணும் பெண்ணும் ஒன்றாகச் சேர்ந்து

செயல்படுவதை அறிந்திருந்தார்; இருவருக்கும் பெரும்பாலும் வித்தியாசமான திறமைகள் இருக்கின்றன, மேலும் அவர்களின் சரீர அங்கங்களும் முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கிறது (வெறுமையாக அல்ல சரீர சம்பந்தமான அறிவில் “ஒரு சரீரம்”).

இரண்டு ஆண்கள் அல்லது இரண்டு பெண்கள் ஒருவருக்கொருவர் உளவியல் மற்றும் உடலியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்று நினைப்பது கேலிக்குரியதாய் இருக்கிறது. நிச்சயமாக, அவர்களுக்குக் குழந்தைகள் இருக்க முடியாது அல்லது ஒரு குழந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. ஓரின சேர்க்கையின் ஐக்கியத்தை “கல்யாணம்” என்று அழைப்பது காலத்தின் ஞானத்திற்கு எதிராகச் செயல்படுகிறது, மற்றும் இறுதியில் அதனுடைய சுயமுட்டாள்தனத்தினால் தோல்வி அடைவது நிச்சயமாய் இருக்கிறது. பண்டைய உலகில் சோதோமின் ஒழுக்கக்கேட்டின் விளைவாக, நகரத்தையும், மற்றும் அதன் குடிகளையும் அழிப்பதில் முடிந்தது. ஓரினப்புணர்வுகள் பிறவியிலேயே இருந்தனவா அல்லது வளர்ந்ததா என்ற கேள்வியைப்பற்றி விவிலியம் எதுவும் கூறவில்லை; ஆனால் இது போன்ற பழக்கம் பாவம் என்று சொல்லுகிறது. ஓரினச்சேர்க்கையாளர்கள், மற்றும் எதிர்பாலின சேர்க்கையாளர்கள் ஆகிய இருவருக்குமே சுய கட்டுப்பாடு இல்லாததே பிரச்சனையாக உள்ளது.

சிலர் ஆவிக்குரிய நோக்கங்களுக்காக அல்லது பல்வேறு காரணங்களுக்காகத் திருமணம் செய்யாமல் ஒற்றை நிலையில் இருக்க விரும்புகிறார்கள். தேவனுக்கும், மற்றும் மனிதசமுதாயத்திற்கும் ஊழியம் செய்வதில் ஒன்றியாய் இருப்பவன் மிகுந்த தன்னிறைவைக் காணலாம். தேவன் நிச்சயித்திருந்த திருமணத்தின் மூலம் கிடைக்கும் அற்புதமான சந்தோஷம், மற்றும் வெகுமானங்களையும், தோல்வியடைந்த திருமணங்களின் துயர எண்ணிக்கையானது முறியடிக்க முடியாது, அல்லது அது இன்னும் தேவனுடைய திட்டம் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. திருமணம் ஒரு வகையான அடிமைத்தனம் என்று கருதுபவன், தேவனால் வடிவமைக்கப்பட்ட அன்பான, ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணின் இடையே உள்ள அன்பு நிறைந்த பரஸ்பர உறவினை ஒருபோதும் எண்ணிப் பார்க்க மாட்டான். அதே நேரத்தில், ஒரு அன்பான திருமணம் தானாகவே பரிபூரணமானது என்று நினைக்கும் எவனும் தவறாக இருக்கிறான். நிறைய வேலை செய்யப்பட வேண்டும் - தேவனுடைய திட்டத்தின்மேல் அல்ல, ஆனால் இதில் ஈடுபட்டுள்ள இருவரின் வளர்ச்சியின் மேல். இயற்கையான சுயநலத்தில் செயல்படுவதை விட, அவர்கள் ஒருவருக்கொருவர் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். சுயநலம் தோல்வியடைந்த திருமணங்களுக்குக் காரணமாய் இருக்கிறது.

திருமணம் விவாகரத்து மூலம் அவமதிக்கப்படுகிறது. தேவனுடைய பார்வையில், ஒரு திருமணத்தின் நிறைவானது, மரணத்திலே முடிவதேயன்றி வேறொன்றிலும் இல்லை. புருஷர்கள் தங்கள் மனைவிகளிடமும், மற்றும் மனைவிகள் தங்கள் புருஷர்களிடமும் அன்புகூரும்படி கட்டளையிடப்படுகிறார்கள் (எபே. 5:25; தீத்து 2:3, 4) .ஒரு தெய்வீக திருமணத்தை ஊக்கமாகப் பராமரிப்பதே, திருமணத்தை மதிக்கிற தேவனுக்கு மரியாதை செலுத்துவதற்குப் போதுமான காரணமாக இருக்க முடியும்.

**வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும்**

**தேவன் நியாயந்தீர்ப்பார் (13:4)**

திருமணம் “மேன்மையுள்ளது,” அதாவது மதிப்புக்குரியது, மகா மதிப்புமிக்கது, மற்றும் தேவனுடைய பார்வையிலும்கூட விலையுயர்ந்தது என்று பொருள்படுகிறது. இதற்கு, மாறாக வேதவாக்கியங்கள் திருமணத்தின் நன்மையானது எந்த விதத்திலும் முக்கியத்துவம் இல்லாமல் இருந்தால், பாலியல் கூட்டுறவுகளைக் கருத்தில் கொள்வதில்லை. ஆகவே, அத்தகைய ஒரு வாழ்க்கை கிறிஸ்தவர்களால் மதிக்கப்பட மாட்டாது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு உறவு தீங்கு விளைவிக்கும், மற்றும் வாழ்க்கையானது தேவனுக்கு விலையுயர்ந்ததாய் இருப்பதிலிருந்து முற்றிலும் விலகியிருக்கும்; உண்மையில், இது 1 தெசலோனிக்கேயர் 4:1-8-ல் கண்டனம் செய்யப்பட்டுள்ளது. உயர்ந்த ஒழுக்கத் தராதரங்கள், ஆரம்பக் காலச் சபையைப் பொதுச் சமுதாயத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டின.

உடல் ரீதியிலும், மற்றும் உணர்ச்சி ரீதியிலும் துன்பங்களை அனுபவித்தல், பாலியல் பாவங்களின் ஒரு இயற்கையான விளைவாக இருக்கலாம். நாம் நேர்மையானவர்களும், மற்றும் ஒழுக்கங்கெட்டவர்களாய் இல்லாமல் இருப்போம் என்ற நோக்கத்துடன் தேவன் நம்மைப் படைத்தார். ஒவ்வொரு சரீரப்பிரகாரமான பாவமும், ஒருவகையான துன்பத்திலேயே முடிவடைகின்றன.

உதாரணமாக, புகைபிடித்தல், சுவாச அமைப்பு அல்லது இதயத்திற்குத் தீங்கு விளைவிக்கும், திடமான குடித்தல் கல்லீரல் நோய்க்கு வழிவகுக்கலாம், மேலும் வேசித்தனத்தின் விபரீதமானது மேகப் புண் அல்லது மேக வெட்டை நோயினால் ஒருவனுடைய பாலின உறுப்புகளுக்குச் சேதத்தை ஏற்படுத்தும். இயற்கையிலிருந்து ஒரு பிரதிபலிப்பாக, தனிநபர்கள் தீங்கு விளைவிக்கும் விளைவுகளை அனுபவிக்கலாம். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் என்று தேவன் இந்த விளைவை ஏற்படுத்தியுள்ளார் (கலா. 6:7, 8). உண்மையில், ஒரு மனிதன் விபசாரம்

செய்கிறபோது, தனது சொந்த உடலின் இயல்புக்கு எதிராகப் பாவம் செய்கிறான் (1 கொரி. 6:18). சரீரமானது, ஒன்றன் பின் ஒன்றாக, பல பாலியல் கூட்டாளர்களுக்காக, அல்லது ஒரு சில மதக் குழுக்களால் நடத்தப்பட்ட பலதார மணத்திற்காக வடிவமைக்கப்படவில்லை. அத்தகைய காரியங்கள், நீடித்த மகிழ்ச்சியைக் கொண்டுவர முடியாது.

**கர்த்தர் நம்மைக் கைவிட மாட்டார் (13:5, 6)**

கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார் என்ற அறிக்கை, ஆதியாகமம் 28:15; உபாகமம் 31:6; யோசுவா 1:5; மற்றும் 1 நாளாகமம் 28:20 ஆகிய வசனங்களை அடிப்படையாகக் கொண்டது. நம் வாழ்வு தனிமையாய் இருக்கிறது என்று நாம் சில நேரங்களில் சிந்திக்கலாம். பிரச்சினைகள் மூழ்கடிக்கிறதாகத் தோன்றும்பொழுது, தேவையற்ற குற்றப்பழியை அல்லது கடுமையான மனத் தளர்ச்சியை எதிர்கொள்கையில், வாழ்க்கை இருண்டதாகவும் ஊக்கமளிக்காததாயும் தோன்றும். கிறிஸ்தவ நண்பர்களைச் சந்தித்து ஆலோசனையுடன், உதவி செய்ய இதுவே தகுந்த ஒரு தருணமாயிருக்கிறது. இத்தகைய நண்பர்கள் மூலமாக, கர்த்தர் கிரியை செய்ய முடியும்.

தேவன் உங்களுடன் இல்லை என நீங்கள் *உணரும்* போது, அவர் அருகில் இருக்கிறார். இப்போது நீங்கள் கற்பனை செய்ய முடியாத விதத்தில், உங்கள் சூழ்நிலைகளில் அவர் கிரியை செய்யலாம். உணர்வுகள் பெரும்பாலும் தவறானதாக இருக்கின்றன. நமக்குப் போராட்டம் வருகையில், எபிரெயர் 13:5, 6 இல் உள்ள நம்பிக்கையான வார்த்தைகளில் ஒரு நம்பிக்கையான விசுவாசம் வைத்து, நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும் மற்றும் உதவிக்காக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்.

கடினமான காலங்களில் தேவையான முன்னேற்பாடுகள் செய்ய, திருமறை நூலிற்கு நம்மை ஒப்புவித்து, இதுபோன்ற வசனங்களை நாம் மனப்பாடம் செய்யலாம்:

> தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும்,
> ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.
> ஆகையால் பூமி நிலைமாறினாலும்,
> மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், நாம் பயப்படோம்
> (சங். 46:1, 2).

**பயம் இல்லாமல் நம்பிக்கை (13:6)**

விசுவாசத்தால் அளிக்கப்பட்ட நம்பிக்கையுடன், "மனுஷன் எனக்கு என்ன செய்வான்" என்று ஒருவன் கேட்கலாம் (சங். 118:6). நமக்கு நீடித்துத் தீங்கிழைக்க ஒருவனாலும் இயலாது; ஏனெனில் தேவன் நம்முடன் இருக்கிறார். அந்த சத்தியத்தில் விசுவாசத்துடன், மனிதனால் என்ன செய்ய முடியும் என்று அச்சத்தை நாம் மேற்கொள்ள முடியும்.

திருமறை நூலில் போதிக்கப்பட்டுள்ளதின்படி, தனது வாழ்க்கையைத் தேவன் ஆளுகை செய்யுமாறு அனுமதிக்கும் ஒருவனுக்கு, தேவ சமாதானம் மற்றும் வல்லமை கிடைக்கும்.

### வேலை தொடர்கிறது (13:7)

சபைக்கு, நல்ல தாழ்மையுள்ள ஊழியம் செய்து வழிநடத்தும் மக்கள் எப்போதும் தேவைப்படுவார்கள். ஜான் வெஸ்லியை கௌரவிக்கும் வண்ணமாக, வெஸ்ட்மினிஸ்டர் நகரில் உள்ள குரு மடாலயத்தில் ஒரு நினைவு சின்னம் இந்த வார்த்தைகளைக் கொண்டுள்ளது: "தேவன் அவரது ஊழியக்காரரை புதைக்கிறார், ஆனால் அவருடைய வேலையைக் கொண்டு செல்லுகிறார்." எங்கள் குழந்தைப் பருவ நாட்களில் இருந்து, எங்களை மேலான பெரியவர்களாக மாற்றக்கூடிய உயர்குடிப் பிறந்த ஆண்கள் மற்றும் பெண்களின் எடுத்துக்காட்டுகள் பின்வருகின்றன. என் பெற்றோர் எப்போதும் எங்கள் சபையின் மூப்பரையும் பிரசங்கிமாரையும், எனக்கு முன்பாகக் கனமுள்ளவர்களாகக் காண்பிப்பார்கள். இருப்பினும், மனிதர்கள் சிலநேரங்களில் ஏமாற்றமடையச் செய்கிறார்கள். சபைத் தலைவர்கள் கூட விசுவாசத்தைக் கைவிட்டு விட்டனர். நாம் மனித பலவீனத்தினால் நம்பிக்கை இழந்து விடுவதற்கு நம்மை அனுமதிக்கக்கூடாது. நம்மை ஒருபோதும் கைவிடாத அல்லது அவருடைய நியமங்களைக் கைவிடாத இயேசு கிறிஸ்துவே, நமக்கு மிகப்பெரிய முன்மாதியாக இருப்பதை வசனம் 8 நமக்கு காண்பிக்கிறது.

### "இயேசு நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார்" (13:8)

"இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார்" (வசனம் 8). "கிறிஸ்தவ நூல்களின் காலங்களில் அவர் அற்புதங்களைச் செய்தார்; அவர் மாறாதவராகவே இருந்ததால், இன்றும் அவர் அவ்வாறே செய்ய வேண்டும்" என்று சிலர் இந்த உண்மையை வாதிடுகின்றனர். இது தவறான காரணமாய் இருக்கிறது, ஏனென்றால் இந்தப் பத்தியானது, அவர் இன்றும் *மாறாதவராக* அதே இயல்பைக் கொண்டிருக்கிறார் என்பதை மட்டுமே போதிக்கிறது. அவர் நம் நலனுக்காக மாறா விருப்பம் உள்ளவராகவும், மற்றும் நம்முடைய ஆத்துமாக்களைப் பாதுகாக்கும் மாறா வல்லமை உள்ளவராகவும் இருக்கிறார். அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது செய்ததைப்போல அவர் செயல்படுகிறார் என்பதாக இந்த அறிக்கையில் எந்த வகையிலும் குறிப்பிடப்படவில்லை.

இயேசு இப்பொழுது சில மீன்களையும் அப்பங்களையும் எடுத்து, உலகில் உள்ள பட்டினி கிடக்கும் லட்சக்கணக்கான மக்களின் பசியினைப் போக்கும் போஜனமாக அவைகளை உடனடியாக

மாற்றிவிடுவாரா? (காண்க மத். 14:15-21; மாற்கு 6:34-44; யோவான் 6:5-13.) இப்பொழுது ஒரு கணத்தில் அவர் தண்ணீரை திராட்சரசமாக மாற்றுவாரா (யோவான் 2:1-10) சாதாரணமாக இன்று ஒரு வார்த்தை பேசுவதன் மூலம்? மனுஷர்களைப் பூமியின் மண்ணினாலே உருவாக்குவாரா (ஆதி. 2:7)? அவர் மரித்தோரிலிருந்து தனி நபர்களை உயிரோடே எழுப்ப (லூக். 7:11-15; 8:49-55-ஐ பாருங்கள்.) இயேசு பூமியிலிருந்தபோது செய்ததைப் போலவே, இப்பொழுது அவர் செயல்படுவதில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

### உண்மைக் கோட்பாட்டை நம்புவது ஒவ்வொருவரின் பொறுப்பாய் இருக்கிறது (13:9)

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், விசுவாசத்தில் அவனுடைய இருதயத்தை ஸ்திரமாக வைத்திருப்பதற்கான பொறுப்பு இருக்கிறது. எபிரெயர்கள் அவர்களுக்கு மிகுந்த தீங்கு விளைவிக்கும் போதனைகளைக் கேட்டுக்கொண்டிருக்கலாம். தவறான போதகர்கள் சபிக்கப்படுவார்கள் (கலா. 1:8, 9), ஆனால் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில், ஒவ்வொரு புதிய போதனையையும் சோதித்துப் பார்ப்பது கேட்பவரின் கடினமான வேலையாய் இருக்கிறது (அப். 17:11; 2 தீமோ. 2:15 பார்க்கவும்). நாம் இதைச் செய்யத் தவறினால், நாம் "கிருபையால் பலப்படுத்தப்படமாட்டோம்" (வசனம் 9). ஆவிக்குரிய வகையில் முதிர்ச்சி பெற, இது அவசியமான ஒன்றாய் இருக்கிறது. வார்த்தையைக் கற்றுக்கொள்வது நம் கடமையாய் இருக்கிறது, ஆகையால் நாம் வழிதப்பிப்போகாமல் வளரக்கூடும் (1 பேதுரு 2:1-3; 2 பேதுரு 3:18).

### ஐக்கியம் (13:9)

சில யூதர்கள் எருசலேமிலிருந்து வரும் வரையிலும், பேதுரு புறஜாதியாருடன் சாப்பிட்டான், பின்னர் அவர்களை ஆதரிப்பதை விட்டு விலகினான். இந்த மாய்மாலத்திற்காகக் கண்டனம் செய்து எதிர்த்து நின்றதாக பவுல் சொன்னான் (கலா. 2:11-21). "சுத்தமான" உணவை மட்டும் சாப்பிடும் யோசனை, யூத போதனைகளில் மிகவும் ஆழமாக இருந்தது, ஆகையால் பேதுரு தனது சகோதரர் தன் நடத்தை மூலம் அதிர்ச்சியடைவார்கள் என்று அறிந்திருந்தான்; கொர்நேலியுவின் மனந்திரும்புதலுக்குப்பின் அவர்கள் புறஜாதிகளுக்கு மத்தியில் இருந்ததில்லை (அப். 10:1-11:18). பேதுருவின் நடத்தை, புதிய புறஜாதி கிறிஸ்தவர்களை எவ்வாறு பாழாக்கும் என்பதை பவுல் கண்டான்; எனவே, அவனுடைய சமரசத்திற்கு, பேதுரு கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தினான். அவன் உறுதியாயிருந்தானென்றால், இந்த யூத மதவாதிகளை நிறுத்துவதற்கு ஒரு வல்லமையான செல்வாக்கு அவனுக்கு இருந்திருக்கும். அவர்கள்

சொன்னார்கள், “கர்த்தரது தலைமைச் செய்தித் தொடர்பாளரான பேதுரு இப்போது தீட்டான உணவை சாப்பிடுவதாலும், மற்றும் இவ்வாறாகப் புறஜாதியாரோடு கூடி இக்காரியத்தைச் செய்வதாலும், ஒருவேளை நாமும்கூட மாற வேண்டும்” என்று அவர்கள் கூறியிருக்கலாம். 9:10 ல், போஜனபானங்களைப்பற்றிய கட்டுப்பாடுகள் “சீர்திருத்தல் உண்டாகும் காலம்” வரை மட்டுமே செயல்பட்டதாக நாம் வாசிக்கிறோம். சபையில் யூதர்களுக்கு அப்பேற்பட்ட காலம் வந்துவிட்டது.

நம் சகோதரரின் ஆத்துமாக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பிற தருணங்கள், அங்கு மெதுவாகப் போவதற்கான தருணமாக இருக்கலாம். புதிய கிறிஸ்தவ விசுவாசிகள் இடறலடையலாம், மற்றும் விழுந்துவிடலாம், அதே சமயத்தில் முதிர்ச்சியடைந்தவர்கள் அவ்வாறு இடறடைவது மிகவும் குறைவாக இருக்கக்கூடும். புதிய கிறிஸ்தவ விசுவாசிகளுடன் ஐக்கியம் கொள்ள, நாம் விசேஷித்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும், மற்றும் போஜனத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒன்றாகக்கூடி போஜனம் செய்வது நீண்ட காலமாக முழுமையான ஐக்கியத்திற்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்குமான ஒரு சின்னமாக இருந்து வருகிறது.

### “[நம்முடைய] உதடுகளின் கனிகளின்” விளைவுகள் (13:15)

நாம் தேவனைத் துதிக்கும் ஸ்தோத்திரபலியாக “உதடுகளின் கனிகள்” இருக்கிறது (வசனம் 15). மனிதனின் “உதடுகளில்” இருந்து வருபவைகள், இதயத்தில் இருந்து தோன்றுகின்றன; இது மனிதனால் வடிவமைக்கப்பட்ட ஒரு இயந்திர கருவி வெளிப்படுத்தக்கூடியதைப்போல் இருக்கவில்லை. தேவன் தங்களுக்குத் துதிக்கும்படியான தாலந்தைக் கொடுத்திருப்பதால், அவரைத் துதிக்க அதைக் கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்று பலர் கூறுகின்றனர். ஒருவனுடைய “தாலந்தானது” (தேவனால் கொடுக்கப்பட்டதா அல்லது இயற்கையாக உருவாக்கப்பட்டதா என்பதை), அவனது சுய மரியாதைக்குரிய நடத்தையைக் காண்பிக்கும் வண்ணமாக உள்ளது. கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்கள் அனைவரும் பாடும்படி வலியுறுத்தப்படுகிறார்கள்-தேவனைத் துதிப்பது மட்டுமல்ல, ஆனால் “ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டும்கூட,” இருக்க வேண்டும் (கொலோ. 3:16). இந்த “உதடுகளின் கனி” என்பது, சிறந்தவர்கள் ஒரு சிலரிடமிருந்து மட்டுமல்ல, எல்லாக் கிறிஸ்தவர்களிடமிருந்தும் வர வேண்டும்.

இந்த இரண்டு பத்திகளும், ஒவ்வொரு கிறிஸ்தவனையும், தேவனுக்குத் துதியின் ஸ்தோத்திரபலியை செலுத்தும்படி கட்டளையிடுகின்றன. எபேசியர் மற்றும் கொலோசெயர் ஆகிய நிருபங்களில் உள்ள பத்திகள், நிச்சயமாகச் சிறந்த தாலந்தோ

அல்லது குறைந்த தாலந்தோ கொண்ட பாடகர்கள் அனைவரும் தலைமைத்துவச் செயல்பாட்டின் கீழ் பங்கேற்கலாம் என்று சபையாரின் பாடலைக் குறிப்பிடுகின்றன. பொது வழிபாட்டில் "நாம்" (வசனம் 15) பங்கேற்க வேண்டும் என்பதாய் இருக்கிறது, மற்றும் இங்கே "[நம்முடைய] உதடுகளின் கனியாக" இருக்க வேண்டும் என்பது அவசியமானதாயிருக்கிறது.

### கிறிஸ்தவர்களுடைய ஸ்தோத்திரபலி (13:15, 16)

மோசேயின் பலி முறைமைகளின் அவசியம், இப்போது தேவையற்றதாக இருக்கிறது என்று எபிரெயர் நிருபம் உறுதியுடன் போதிக்கிறது. பழைய முறைமை காலம் கடந்து விட்டது. அது முழுமையாக பாவங்களை மன்னிக்க முடியாது என்பதால், உண்மையில் அது மனிதனை ஒருபோதும் தேவனிடம் கொண்டு சேர்க்க முடியாது. புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ள ஸ்தோத்திரபலிகள், தேவனையும், கிறிஸ்துவையும் துதிக்கும் வகையில் செலுத்தப்படுகின்றன. நம்முடைய முழு வழிபாடும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நடைபெறுகிறது; தேவனை அவருடைய நாமத்தின் மூலமாக மட்டுமே நாம் அணுக முடியும். ஒவ்வொரு பாடலிலும் அல்லது ஜெபத்திலும் நாம் இதைக் குறிப்பிடுகிறோமா இல்லையோ, நாம் அவருடைய "நாமத்தினால்" கட்டப்பட்டிருக்கிறோம், அதாவது அவருடைய அதிகாரத்தால் ஆளுகை செய்யப்படுகிறோம் என்று பொருள்படும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் (கொலோ. 3:17).

"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய *ஸ்தோத்திரபலியை* அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (வசனம் 15; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது) என்று கிறிஸ்தவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். எனினும், அவபக்தியுள்ளவர்கள் தேவனை ஸ்தோத்திரிப்பதில்லை (ரோமர் 1:21ஐ வாசிக்கவும்). வாழ்க்கையில் ஒரு ஆசீர்வாதத்தை பெறும் நாத்திகன் எத்தனை பரிதாபமானவனாய் இருக்கிறான், மற்றும் ஸ்தோத்திரம் சொல்ல யாரும் இல்லை! ஸ்தோத்தரித்தலும், மற்றும் துதித்தலும் நம் வாழ்வில் கனி கொடுக்கும்.

ஒரு கிறிஸ்தவன் மற்றவர்களுக்கு "தானதர்மம்பண்ண" ஈடுபடுவதில் கடமைப்பட்டிருக்க வேண்டும், ஏனென்றால் அது 16-ஆம் வசனத்தில் *கொனோனியா*, *koinonia* என்ற யோசனையாய் இருக்கிறது. நாம் மத ஊழியத்தின் விருப்பமான செயல்களால் நிரப்பப்பட வேண்டும் என்பது, "ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்பது" ஆகும் (ரோமர் 12:1, 2-ஐ வாசிக்கவும்). நம் மறைநூலின் 16-ஆம் வசனத்தின்படி, நன்மை செய்வதும்கூட, ஒரு "பலியாக" இருக்கிறது.

அநேகமாக, நாம் செலுத்தும் அனைத்து பலிகளிலும் மிகச் சிறந்தது, தேவை உள்ளவர்களுக்குப் பாசத்துடனும், மற்றும் அன்பான நடவடிக்கையுடன் உதவி வழங்குவதாகும். “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது” என்று யாக்கோபு பரிந்துரைத்துள்ளான் (யாக். 1:27; NEB). “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே” என்பதாக NRSV மொழிபெயர்க்கிறது. இம்மாதிரியான தியாகத்தைச் செய்வதில், நாம் நன்மைசெய்கிறவராகச் சுற்றித்திரிந்த இயேசுவைப் பிரதிபலிக்கிறோம் (அப். 10:38). நாம் நியாயந்தீர்க்கப்படுவதற்கு இதுவே ஒரு பரீட்சையாயிருக்கிறது (மத். 25:34-46). நம்முடைய நற்கிரியைகள், ஒரு ராஜரீக ஆசாரியக்கூட்டமாக நாம் செலுத்தும் “ஆவிக்கேற்ற பலிகளின்” பகுதியாக இருக்கிறது (1 பேதுரு 2:5).

**மூப்பர்களின் வேலை என்ன? (13:17)**

உள்ளூர் சபையில் தேவனால் நியமிக்கப்பட்ட அதிகாரம் படைத்தவர்கள் மூப்பர்களாய் இருக்கிறார்கள். சில சபைகளில் மூப்பர்கள் வெறுமனே வாக்குப்பதிவு செய்கிறவர்களாக, “கர்த்தர் இவ்வாறு கூறுகிறார்.” என்ற ஒரு சிறிய கரிசனையுடன் இருக்கும் வரை, மூப்பர்களின் நிலமையானது ஒரு தெளிவற்ற முறையில் விமர்சிக்கப்படுபவர்களாகவும், மற்றும் நியாயமற்றதாக விமர்சிக்கப்படுபவர்களாகவும் உள்ளது. கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதாகத் தேவனின் வார்த்தை குறிப்பிட்டு அறிவுறுத்தியுள்ளது.

மூப்பர்களின் வேலை, இரட்சிக்கப்பட்டவர்களை அந்நிலையிலேயே வைத்திருக்க வேண்டும். ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவது மூப்பர்களின் முதன்மை வேலையாயும், மற்றும் அப்போஸ்தலர்களின் ஊழியம் இரண்டாவது வேலையாயும் உள்ளது. அப்போஸ்தலர்கள் ஒரு காலத்தில், மூப்பர்கள், மற்றும் உதவிக்காரரின் வேலையைச் செய்திருந்தாலும் சில பணிகள் தகுதி வாய்ந்த மக்கள் மீது திருப்பப்பட்டது, மற்றும் உள்ளூர் தலைமைத்துவம் நிறுவப்பட்டது. அப்போஸ்தலர் 6:1-7ல், அப்போஸ்தலர்கள் சபைச் செயல்களை மேற்பார்வையிடுவதற்கு அவர்களுக்கு உதவியாக மனிதர்களை நியமித்தார்கள், அதனால் வேதாகம வார்த்தைகளைத் தொடர்ந்து அறிவிப்பதைப் போன்ற மற்ற காரியங்களை அவர்களால் செய்ய முடியும். (அப்போஸ்தலர்கள் சுவிசேஷர்களாகவும் கூட இருந்தனர்.) பின்பு, சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழுபேரை, அப்போஸ்தலர்கள்

தங்கள் ஊழியத்தின் பணியினைச் செய்யும்படி ஏற்படுத்தினார்கள். இது மூப்பர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஒரு முன்மாதிரியாக நிச்சயமாக இருக்க வேண்டும்: அவர்கள் ஆத்மாக்களைப் பராமரிக்க வேண்டும், மற்றும் காயப்பட்டோருக்கும், பசியுற்றோருக்குமான தேவைகளைப் பூர்த்திச் செய்வதைப் போன்ற கடினமான பணிகளை மற்றவர்கள் செய்ய அனுமதிக்க வேண்டும்.

மூப்பர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள உறுப்பினர்களைப் போதனை செய்வதன் மூலமோ அல்லது அது ஒழுங்காகச் செய்யப்படுவதைக் கண்டு அறிவுறுத்தும் கடின பணியை உடையவர்களாய் இருக்கிறார்கள் (1 தீமோ. 5:17). அவர்கள் நமக்குப் போதிக்கிறார்களேயானால், நாம் அவர்களுடைய போதனையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுவே ஆளுமை செய்வதற்கான அவர்களுடைய கடமையாயிருக்கிறது, மற்றும் அந்த ஆளுமைக்கு அடிபணிவது நம் கடமையாயிருக்கிறது.[61]

மூப்பர்களுக்கான நமது மரியாதை, சபைக்கு அவர்கள் செய்யும் சேவையைப் பொறுத்ததேயன்றி, அவர்கள் வைத்திருக்கும் சாதாரண ஒரு "அலுவலகம்" காரணமாக இருக்காது.[62] நாம் "அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளுகிறோம்" (1 தெச. 5:12, 13). சபையின் பிரிவினை அல்லது சமயக் கோட்பாடுகள் ஆகியவைகளைத் தடுக்கும் ஆபத்துக்களின் எச்சரிக்கையை உள்ளடக்கிய அச்சுறுத்தலான ஒரு பொறுப்பு அவர்களுடையதாய் இருக்கிறது.

### ஒரு மூப்பர் இருக்க அனுமதிக்கப்படுகிறாரா? (13:17)

புதிய ஏற்பாட்டு சபையில், "மூப்பர்," "மூப்பராகிய சங்கத்தார்," "மேற்பார்வையாளர்," "மேய்ப்பர்," மற்றும் "போதகர்" ஆகிய வார்த்தைகள் ஒரே நிலைப்பாட்டைக் குறிக்கின்றன. அதே இன்று உண்மையாக இருக்க வேண்டும். ஒரு "போதகரைக்" கொண்ட சபைகள் மனிதனின் பாரம்பரிய ஆசை அல்லது நடைமுறைக்கு ஆதரவாக, விவிலிய அதிகாரத்தை ஒதுக்கிவைக்கின்றன. புதிய ஏற்பாட்டில், போதகர்கள் என்ற வார்த்தை எப்பொழுதும் பன்மையில் இருக்கிறது (அப். 14:23; பிலி. 1:1; 1 தீமோ. 4:14; தீத்து 1:5 பார்க்க). ஒரு சர்வாதிகாரி காரியங்களை விரைவாகச் செய்யலாம், ஆனால் அத்தகைய ஒரு அமைப்பு, ஒருவருக்கொருவர் பூரணமாகப் பூர்த்திச் செய்யும் பலரின் நியாயத்தை அனுமதிக்காது. ஒரு மனிதனால் நியாயத்தை வழங்க முடியாது, மற்றும் ஞானமானது, ஒரு சபையைத் தலைமை ஏற்றும், பாதுகாத்தும் வரும் ஒரு குழுவினரால் பகிர்ந்தளிப்பதாய் இருக்கிறது. ஒரு மனிதப் போதகரைக் கொண்ட அமைப்பானது தெய்வீக அதிகாரத்தை மீறுகிறது; புதிய ஏற்பாட்டு சபையில் இதுபோன்ற ஒரு உதாரணமும் காணப்படவில்லை.

## சுவிசேஷ பிரசங்கிமார்களுக்காகவும் சபைக்காகவும் ஜெபம் செய்யுங்கள் (13:20, 21)

பவுல் அடிக்கடி அவனது சார்பில் சபையின் ஜெபங்களை நாடிச்சென்றான். சபையின் ஜெபத்தின் வல்லமையில் அவன் நம்பிக்கை வைத்திருந்தான், மற்றும் பதிலுக்கு அவனும் சகோதரருக்காக அடிக்கடி ஜெபம் செய்தான்.

சபையானது, கர்த்தருடைய வார்த்தையை அறிவிப்பவர்களுக்காகத் தினமும் வேண்டிக்கொண்டிருக்க வேண்டும், ஏனென்றால், அநேக உறுப்பினர்கள் தாங்கள் ஒருமுறை வைத்திருந்த விவிலியக் கொள்கைகளை நீண்ட காலத்திற்கு பற்றிப் பிடித்திருப்பதில்லை. வேலை அல்லது சமுதாயத்திற்காக, அவர்கள் விட்டுக்கொடுக்குமாறு ஈர்க்கப்படுகிறார்கள்அது சபை மக்களுக்குக் கேட்பதற்குக் கடினமாக உள்ளது என்பதால் சத்தியத்தை ஒருபோதும் நிறுத்தி வைத்துக் கொள்ளாத துணிச்சலான பிரசங்கிமார்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள், விவிலியத்தின் எல்லா நியமங்களையும் போதிப்பதில் உறுதியாய் நிலைத்து நிற்கும் மக்கள் நமக்கு வேண்டும்.

## எபிரெய சபை மக்களுக்கான ஒரு ஜெபம் (13:20, 21)

எபிரெய நிருபத்தில் உள்ள இறுதிப் பகுதி, நிருபத்தைப் பெறுபவர்களுக்கான ஒரு ஜெபத்தையும், மற்றும் அதன் முழுச் செய்தியின் ஒரு சுருக்கத்தையும் கொண்டுள்ளது. கிறிஸ்தவர்கள் எப்படி இருக்க வேண்டும், மற்றும் அந்த வழியில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நிருபத்தின் ஆசிரியர் மதிப்பாய்வு செய்தார். இந்தப் பகுதியில், வசனங்கள் 20 மற்றும் 21 ஆகியவற்றில் உள்ள அறிக்கையானது முக்கியமானதாயும், மற்றும் நம் தேவைகளைச் சந்திக்க ஆடுகளின் பிரதான மேய்ப்பனாகிய சமாதானத்தின் தேவனை, அனுமதிக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. ஒரு செயலின் விளைவை, நாம் எப்பொழுதும் புரிந்துகொள்ளாமல் போனாலும், நாம் திரும்பிப் பார்த்து, நமக்கு நேரிட்ட எல்லா காரியங்களிலும் அவருடைய கரம் இருந்ததைக் காண முடியும்.

இந்தச் செயலின் நடுவில், நாம் மற்றவர்களின் ஜெபங்களை நாட வேண்டும் (13:18, 19), ஏனென்றால் நாம் உணர்ந்து கொள்வதைவிட, அதுவே முக்கியமானதாய் இருக்கிறது. நிருபத்தின் ஆசிரியர், அவருடைய சபையில் உள்ள சில உறுப்பினர்களை "ஆவிக்குரிய குழந்தைகள்" (5:11-14) என்று அழைத்த போதிலும், அவர்களுடைய ஜெபங்களை இன்னும் மதித்தார். நாம் நமக்காக ஜெபிக்கிற எவருடைய ஜெபங்களையும் அசட்டை செய்யக்கூடாது.

தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கும் விதமானது, மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது, ஆனால் நாம் அவர் பதிலளிக்கிறார் என்பதை நிச்சயமாக நம்பலாம். "நித்தியத்தின் உடன்படிக்கையின்

இரத்தத்தினாலே” “சமாதானத்தின் தேவன்” நமக்கு உறுதி அளித்திருக்கிறார். மனிதனால் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் (உடன்படிக்கைகளை) மறக்கப்படும், ஆனால் ஒரே மெய்யான தேவன் நம்முடன் செய்த உடன்படிக்கையானது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். கிறிஸ்து சிந்தின இரத்தத்தால் மட்டுமேயன்றி, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததாலும்கூட இந்த உடன்படிக்கைக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டது. “கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள்” (கலா. 3:26, 27) எத்தனைபேரோ, அத்தனைபேரும் அவர்மீது விசுவாசத்தில் நிலைத்திருந்தால், நித்திய இரட்சிப்பின் உத்தரவாதம் உள்ளது.

தேவன் தம்முடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்மை “ஆயத்தப்படுத்துகிறார்.” இங்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை “பரிபூரணம்” என்பதைக் குறிக்கவில்லை (τέλειος, *டெலியோஸ்*); மாறாக, இது “முறிந்து போன ஒரு எலும்பை, மீண்டும் குணப்படுத்திப் பரிபூரணச் சீரமைப்பில் வைப்பது” என்று பொருள்படும் வார்த்தையான καταρτίζω, *கட்டர்டிஸூ* என்பதாய் இருக்கிறது. இந்த சரி செய்தால் நம் சொந்த முன்முயற்சி அல்லது வல்லமையினால் அல்லாமல், இயேசு கிறிஸ்துவின் மூலம் ஏற்படுகிறது. நமக்குத் தேவையான விசுவாசம் நம்மிடம் இருக்கும்போது, தேவன் நம்மிலும், மற்றும் நம் மூலமாகவும் கிரியை செய்து, உலகில் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவார் (பிலி. 2:12, 13).

எபிரெயர் நிருபத்தை எழுதிய ஆசிரியர், கர்த்தர் செய்த உபகாரங்களுக்காகவும், மற்றும் நமக்குச் செய்து கொண்டிருக்கிற உபகாரங்களுக்காகவும் அவருக்குத் துதியை (“தேவனைப் போற்றிப்பாடும் ஒரு பாடல்”) ஏறெடுத்தார். நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றபோது மட்டுமல்லாமல், எப்பொழுதும் அவரை நாம் துதிக்க வேண்டும். மிச்சிகனிலுள்ள ஃபிளின்ட் நகரில் நான் ஒரு இளைஞனாக இருந்தபோது, எங்கள் பிரசங்கியாரான ஹ்யூகோ ஆல்மண்ட் என்பவர், “தேவனுக்கு நன்றி சொல்லாமல், எப்போதும் ஜெபம் செய்யாதே” என்று அவருடைய விவிலிய வகுப்பிலே போதித்தார். ஒவ்வொரு பிரார்த்தனையிலும் முதலில் நன்றி செலுத்துவதன் மூலம், நான் அந்தக் கட்டளையைப் பின்பற்ற முயற்சி செய்கிறேன்.

## இந்தப் பிரசங்கத்தைத் தாங்குங்கள் (13:22)

“புத்திசொல்லும் வார்த்தை” என்பது ஒரு பிரசங்கத்திற்கான ஒரு பதமாக இருந்தது (அப். 13:15 பார்க்கவும்). இங்கு “புத்திசொல்” என்ற கிரேக்க வார்த்தையும், 3:13 ல் உள்ள “ஊக்குவிக்க” என்ற வார்த்தையும் ஒரே மாதிரியாக இருக்கிறது, மற்றும் அதில் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொள்ளும்படி நாம் அறிவுறுத்தப்படுகிறோம்.

சிறந்த வாழ்க்கை மற்றும் உயர்ந்த சேவைக்கு நம்மை ஊக்குவிப்பதற்கான நோக்கம் கொண்ட சில படிப்பினைகளை நாம் எடுத்துக் கொள்ளுவது எவ்வளவு கடினம்! கடிந்து கொள்ளுதலை நாம் விரும்புவதில்லை. சில சமயங்களில், “எனக்குப் பிரசங்கிக்காதே!” என்று நாம் சொல்லுகிறோம். நிருபத்தின் ஆசிரியர், ஒருவேளை சில வாசகர்கள், தான் அவர்களைக் கடிந்து கொள்ளுவதாக நினைப்பார்கள் என்பதை அறிந்திருந்தார், ஆகவே அவர் அவர்களைப் பொறுமையோடு இருக்கும்படியும், மற்றும் போதிக்கப்பட்டதைக் கடைபிடிக்க முயற்சி செய்யும்படியும் வற்பறுத்தினார். எபிரெயருக்கு எழுதின நிருபமானது, அதைப்பற்றிச் சிந்திப்பதற்கு ஒரு சாதாரணப் புத்தகம் அல்ல; அதற்கு உழைப்புத் தேவைப்படுகிறது. “எபிரெயருக்கு எழுதின நிருபமானது, தேவனுடைய எக்காள சத்தத்தின் செயல் முறையாயிருக்கிறது.”[63]

---

இறுதி குறிப்புகள்

[1]இந்த விளக்கம் Craig R. Koester, *Hebrews: A New Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 (New York: Doubleday, 2001), 554-56, n. 453. [2]Ibid., 556. [3]உடன் சேர்ந்து (ἀδελφός, *அடெல்போஸ்*; “சகோதரர்”) இந்த அன்பு (φιλέω, *பிலியோ*; இயற்கையான ஒரு அன்பு) ஆகும். *அகாப்பே* (ἀγάπη) அன்பானது, தேவ அன்பைப் போன்று சுய தியாகம் செய்வதாய் இருக்கிறது. இது மிகவும் இயற்கையானது அல்ல, ஏனென்றால் அது நியமத்தின் அடிப்படையில் இருக்கிறது (1 யோவான் 4:19). எவ்வாறெனினும், செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில், *பிலியோ* மற்றும், *அகாப்பே* ஆகியவைகள் சில நேரங்களில் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. [4]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983), 268. [5]Clement of Rome *Epistle to the Corinthians* 10.7; 11.1. [6]“அந்நியர்கள் ஊழியம் செய்ய அவர்களுடைய வாசற்படியிலே வந்திருக்க வேண்டும், ஆனால் சிறைச்சாலையில் இருப்பவர்கள் விசாரிக்கப்படவேண்டுமென்று காத்திருக்கிறார்கள்.” காவலில் இருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்று இயேசுவும் கூறியுள்ளார் (மத். 25:36). (Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* [Grand Rapids, Mich.: Baker Book House, 1976], 247.) அந்த நாட்களில் சிறைச்சாலைகளில் துன்பம் கொடூரமாக இருந்தது. குடியிருப்புகள் இடவசதி இல்லாததாயும், அருவருப்பானதாயும், மற்றும் சப்தம் நிறைந்ததாயும் இருந்தன; அப்பம் மற்றும் தண்ணீர் மட்டுமே வரையறுத்துக் கொடுக்கப்பட்டன; மற்றும் காரணம் இல்லாமல் சிறையிருப்பின் காலம் நீண்டு போகலாம். ஆரம்பகாலப் பரிசுத்தவான்கள் கைதிகளைப் பார்க்கச் சென்றபோது, அவர்களும் சிறைவாசத்தின் ஆபத்துக்குள்ளானார்கள். இந்த மாதிரியான சில சூழ்நிலைகள், Arthur W. Pink எழுதிய, *An Exposition of Hebrews* புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 1121. [7]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 392. [8]ஒரு நாட்டின் நீதிமன்றங்கள் ஓரினச்சேர்க்கை “திருமணம் செய்துகொள்ள” அனுமதித்தாலும்கூட, அது தேவனுடைய பார்வையில் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. [9]Jimmy Allen, *Survey of Hebrews*, 2nd ed. (Searcy, Ark.: by the author, 1984), 155. [10]Thomas Hewitt, *The Epistle to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 206.

[11]Bruce, 393, n. 36. 1 தெசலோனிக்கேயர் 4:6 ஐப் பார்க்கவும், அங்கே (πλεονεκτέω, *பிலியோநெக்ட்டியோ*) என்ற வார்த்தை, “வஞ்சித்து” என்று

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அந்த வார்த்தையானது, "சாதகமாக எடுத்துக்கொள்" என்றும், மற்றும் பாலியல் செயல்பாட்டினை உள்ளடக்கியிருக்க முடியும் என்பதாகப் பொருள்படுகிறது. [12]பண ஆசை, ஒரு மனிதனை மூப்பனாகச் சேவை செய்வதற்குத் தகுதியற்றவன் ஆக்குகிறது. (1 தீமோ. 3:3-ஐயும்; 6:10-ஐயும் பாருங்கள்.) கொலோசெயர் 3:5, "விக்கிரகாராதனையான" பொருளாசை எனக் குறிக்கிறது. [13]Bruce, 393. [14]Kenneth Samuel Wuest, *Hebrews in the Greek New Testament for the English Reader* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1951), 233. [15]இரட்டை எதிர்மறை, கிரேக்கத்தில் முக்கியத்துவம் சேர்க்கிறது. [16]பழைய ஏற்பாட்டில் எந்தவொரு பத்தியிலும், இந்த மேற்கோள் சரியாகக் காண்பிக்கப்படவில்லை. இருப்பினும், அதே முறையில், Philo *On the Confusion of Tongues* 32 இந்த மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஒருவேளை, இரண்டும் ஒரு பிரபலமான கூற்றினையோ அல்லது நீடித்தில்லாத பயன்படுத்தியுள்ள செப்துவஜிந்த்-ன் ஒரு பதிப்பினை மேற்கோள் காட்டியிருக்கலாம். (Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* [Moberly, Mo.: Scripture Exposition Books, 1992], 236, n. 13.) [17]Pink, 1151. [18]Wuest, 234. [19]யோவான் 10:27-29 வசனங்களானது, நம்மை உருவாக்க நம்மால் என்ன செய்ய முடியும் என்பதைக் குறிக்கவில்லை; வேறு எவராலும் நம்மைக் கர்த்தருடைய கரத்திலிருந்து பறித்துக் கொள்ள முடியாது என்பதாக அது பொருள்படுகிறது. [20]சங்கீதம் 118 ஆனது, யூதர்களின் புகழ்பெற்ற ஒரு துதியின் சங்கீதமாக இருந்தது, இது பண்டிகைகளில் தவறாமல் பயன்படுத்தப்பட்டது (Guthrie, 270).

[21]Lightfoot, 248. [22]ஆபேல் கொலை செய்யப்பட்டான் (11:4), இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாகக் கொடூரமாக நடத்தப்பட்டனர் (11:25), நீதிமான்கள் கொல்லப்பட்டார்கள் (11:35-38), மற்றும் இயேசு சிலுவையில் அறையப்பட்டார் (12:1-4). (Craig R. Koester, *Hebrews: A New Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 [New York: Doubleday, 2001], 566.) [23]எபிரெயர் எழுதப்பட்ட காலத்திலே, யோவானும் யூதேயாவை விட்டு வந்து விட்டான். அவன் உயிருடன் இருந்த போதிலும், அவன் உயிருடன் இருந்தானா அல்லது இல்லையா என்பது வாசகர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். [24]Lightfoot, 249. [25]புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள "விசுவாசம்" என்ற வார்த்தையை நான்கு வழிகளில் பிங்க் விளக்குகிறார்: "விசுவாசம்" என்பது (மத். 9:22); நம்பப்படுகிறதாயும் (அப். 14:22; ரோமர் 10:8; யூதா 3); விசுவாசத்தின் கனிகளும் கிரியைகளும் உடையதாயும் (1 தெச. 3:6; யாக். 2:18); மற்றும் மெய்பற்றுள்ள விசுவாசமுமாய் இருக்கிறது (மத். 23:23; ரோமர் 3:3). (Pink, 1186.) [26]என்ற இந்தச் சொற்றொடர் Edward Fudge, *Our Man in Heaven: An Exposition of the Epistle to the Hebrews* (Athens, Ala.: C. E. I. Publishing Co., 1973). [27]வெளிப்படுத்தல் 5 மற்றும் 6-ல் உள்ள முத்திரைகளின் திறப்பு, தேவ ஆட்டுக்குட்டியானவர் இப்போது இதை அறிந்திருக்கிறார் என்று கூறுகிறது. எதிர்காலக் காரியங்களைப் பற்றிய ஞானத்தையும் புரிந்துகொள்ளும் ஆற்றலையுமுடைய அவர் தகுதியுடையவராய் இருக்கிறார் (5:12). [28]இதைப்போன்ற அநேக எச்சரிக்கைகள் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. பார்க்க ரோமர் 16:17, 18; 1 தீமோ. 6:20, 21; தீத்து 3:9-11; 2 பேதுரு 3:16. [29]"போதனையைப்" போன்றே, "மதக்கொள்கை" என்பதும் ஒன்றாய் இருக்கிறது. (KJV ஐ காண்க.) [30]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 257.

[31]உடல் பலியிடப்படுதல் அல்லது வணங்குவதற்கான இடத்தின் குறைபாட்டினால் கிறிஸ்தவத்திற்குச் சாரம் இல்லாதிருந்தது, அதுவே முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்திற்கு ஒரு பொதுவான ஆட்சேபனையானது. ஏனென்றால், கிறிஸ்தவர்கள் காணக்கூடிய உபகரணங்களைப் பெரும்பாலும் மதத்துடன் தொடர்புபடுத்தவில்லை, அவர்கள் நாத்திகர்களால் குற்றஞ்சாட்டப்பட்டனர். தேவாலயத்தில், ஒரு கோவில், வணங்குவதற்கான ஒரு இடம், பலிகள், குருக்கள் மற்றும் மதச் சடங்கு போன்ற காரியங்கள் தேவையற்றதாய் இருக்கிறது. நம்முடைய பலியானது சிறந்தது, ஏனென்றால் அது கிறிஸ்துவே பலியானார் என்பதாய் இருக்கிறது. [32]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 489. [33]10 முதல் 13 வரை உள்ள வசனங்களில், கர்த்தரின் இராப்போஜனத்துடன் நேரடி தொடர்பு இல்லை. யோவான் 6:51, 53, 54 வசனங்களுக்கு, சொற்களுக்கு நேரான எந்த ஒரு தொடர்பும் அங்கு இல்லை.

“ஜீவ அப்பமாகிய” கிறிஸ்துவைப் புசிப்பது பற்றிச் சொல்லுகிறது. இயேசு அந்த அறிக்கையைச் செய்த பிறகு, அவர் “மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது” என்று சுட்டிக்காட்டினார் (யோவான் 6:63). நாம் கிறிஸ்துவின் சரீரத்தை உண்மையில் புசிக்கவும், மற்றும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணவும் முடிந்தாலும் கூட, ஆவிக்குரிய வழியில் அதனால் நமக்கு எந்தப் பிரயோஜனமும் இருக்காது. அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாமல், அவருடைய மாம்சத்தைப் புசிக்கிறதினாலே நாம் கிறிஸ்துவுக்குள் ஐக்கியம் கொள்ளுவதில்லை. அதுவே, யோவான் 6:53, 54, 63 வசனங்களின் பொருளாய் இருக்கிறது. “போஜனம் பண்ணுவதைப்” பற்றி இயேசு பேசியபோது, அவர் தம் போதனைகளின் ஆவிக்குரிய தன்மையைக் குறிப்பிட்டார்; அது முழுமையாக “விழுங்கப்பட்டு,” “செரிக்கப்பட்டு,” கிறிஸ்தவத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். சரீரப்பிரகாரமாக ஒருவன் எதைச் சாப்பிட்டாலும், அல்லது சாப்பிடாவிட்டாலும், அது அவனுடைய ஆத்துமாவை இரட்சிக்கவோ அல்லது குறை என்று கண்டிக்கவோ செய்யாது. [34]Bruce, 399-400. [35]பழைய ஏற்பாட்டில், சில மனிதர்களும் விலங்குகளும் பாளயத்துக்குப் புறம்பே அனுப்பி விடப்பட்டனர்: நாதாபும், அபியூவுடைய சரீரங்கள் (லேவி. 10:4, 5); கல்லெறிந்து கொல்லப்பட்ட ஒரு தூஷணக்காரன் (லேவி. 24:14, 23); மிரியாம், குஷ்டரோகியாக இருந்தபொழுது, அவள் ஏழு நாட்கள் பாளயத்துக்குப் புறம்பே செலவழிக்க வேண்டியிருந்தது (எண். 12:14, 15); மற்றும் பிறர் பழி சுமக்கும் பலிக்கான வெள்ளாட்டுக்கடாவும் (லேவி. 16:20-22). [36]முதலாம் நூற்றாண்டின் சுவர் இருந்த அதே இடத்தில், பழைய நகரத்தைச் சுற்றியுள்ள சுவர் இருக்கவில்லை. [37]இயல்பானது விரைவில் “மறைந்து” போய் விடும். 8:13-ல் உள்ள கருத்துக்களை மறுபரிசீலனை செய்யுங்கள். [38]Bruce, 402. [39]Koester, 577. [40]7:12-14 இல் உள்ள கருத்துரைகளை மறுபரிசீலனை செய்யுங்கள்.

[41]Lightfoot, 252. [42]ரோமாபுரியும், மற்றும் ரோம் நகரில் உள்ள போப்பாண்டவரின் மாளிகையும், பலருக்கு “திருச்சபையாக” பிரதிநிதித்துவம் அளிப்பதால், இந்தத் தலைப்பு அந்த நகருக்குப் பொருந்துகிறது. நிச்சயமாக, கர்த்தருடைய சபை நித்தியத்திற்குரியதாய் இருக்கிறது (காண்க தானி. 2:44; மத். 16:18). [43]Bruce, 404. [44]Hewitt, 210. [45]Wuest, 239. சங்கீதக்காரன் (கள்) பலிகள் வாய்மொழியாக இருக்க முடியும் என்பதை அறிந்திருந்தான் (சங். 50:14, 23; 51:15-17; 107:22). [46]Reese, 244. [47]Koester, 572. [48]Bruce, 407-8. “கூர்ந்து நோக்கு” என்று எசேக்கியேல் 3:18-21 வசனங்கள் அறிவுரை கூறுகிறது. [49]இத்தகைய அறிக்கைகள் இறுதி நியாயத்தீர்ப்பில் கொடுக்கப்படலாம், ஆனால் “செய்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, நடந்துகொண்டிருக்கும் ஒரு செயலைக் குறிக்கிறது. [50]பார்க்க ரோமர் 15:30; 2 கொரி. 1:8-11; எபே. 6:19; கொலோ. 4:3; 1 தெச. 5:25; 2 தெச. 3:1.

[51]ரோமர் 15:33; 16:20; பார்க்க 1 கொரி. 14:33; 2 கொரி. 13:11; பிலி. 4:9; 1 தெச. 5:23. 2 தெச. 3:16 இல் அவர் “சமாதானத்தின் கர்த்தர்” என அழைக்கப்படுகிறார். [52]இந்த நிருபத்தில், இந்த ஒரே இடத்தில்தான் இயேசு “மேய்ப்பன்” என்று அழைக்கப்படுகிறார். மேற்கோள் ஏசாயா 63:11 (செப்துவஜிந்த்) இலிருந்து வருகிறது. [53]“மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த” என்ற முதன்மையான கோட்பாடு, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றவர்களும் எழுப்பப்படுவதற்கான அடிப்படை என்பதை முன்னூகிக்கிறது (6:2). [54]Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* (London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 449. [55]“ஆமென்” என்ற வார்த்தை, பெரும்பாலும் செப்துவஜிந்த்தில் *genoito*, ஜெனோட்டோ (“அது அவ்வாறாக இருக்கட்டும்”) என வழங்கப்பட்டுள்ளது, ஆனால் இந்தப் பத்தியானது, இந்த வார்த்தை எவ்வாறு “[எபிரெய மொழியிலிருந்து] கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தது என்பதற்கான ஒரு பிரதிபலிப்பாக இருக்கிறது, மற்றும் ஆரம்பகாலச் சபைகளில், இது பரவலாகப் பயன்படுத்தப்பட்டது” (Koester, 574). [56]அவைகள் எபிரெயர் நிருபத்தைவிட நீளமானதாக இருந்தபோதிலும், ஐயத்திற்கிடமான புத்தகங்களான 2 மக்காபியர் மற்றும் பர்னபாவின் நிருபம் ஆகியவைகள் சுருக்கமாகக் கணக்கிடப்பட்டன. இந்தப் படைப்புகளின் சுருக்கமானது, 2 மக்காபியர் 2:31, 32-இலும், மற்றும் பர்னபாவின் நிருபம் 1:5 இலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [57]அந்தச் சமயத்தில், தான் அதை வாசித்ததாக ரேமண்ட் பிரவுன் கூறினார். (Brown, 270.) [58]Lightfoot, 255-56, n. 10. [59]“இத்தாலியில் இருந்து” (NASB; NIV)

என்ற ஒரு விளக்கமாய் இருக்கிறது, மற்றும் ரோமிற்கு அப்பால் வாழும் இத்தாலியர்களை நோக்கி இதன் பொருள் சாய்வதாக உள்ளது. [60]பார்க்க ரோமர் 16:24; 1 கொரி. 16:23; 2 கொரி. 13:14; கலா. 6:18; எபே. 6:24; பிலி. 4:23; கொலோ. 4:18; 1 தெச. 5:28; 2 தெச. 3:18; 1 தீமோ. 6:21; 2 தீமோ. 4:22; தீத்து 3:15; பிலே. 25.

[61]Milligan, 493. [62]James Thompson, *The Letter to the Hebrews*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1971), 182. [63]James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 392.